மக184

# மங்கலைக் குறிச்சிப் பொங்கல் நிகழ்ச்சி

டாக்டர் ச. சோமசுந்தர பாரதியார்

# மங்கலக் குறிச்சிப் பொங்கல் நிகழ்ச்சி

(ஒரு செய்யுட் கதை)

நாவலர் — கணக்காயர் — டாக்டர்

**ச. சோமசுந்தர பாரதியார்,** எம்.ஏ., பி.எல்., டி.லிட்.,

**நாவலர் புத்தக நிலையம்**

59, மேல ஆவணி மூல வீதி

மதுரை-625001

முதற்பதிப்பு : 1944
2ஆம் பதிப்பு : செப்'79
உரிமை பதிவு

விலை ரூ 4.50

பதிப்பாசிரியர்
ச. சாம்பசிவனார், எம்.ஏ.,

# MANGALAKKURICHI PONGAL NIGALCHI

*By*

**Dr. S. Somasundara Bharathiar,**
M.A., B.L., D.Litt.

19623

*Published by*
NAVALAR PUTHAKA NILAYAM
59, West Avani Moola Street,
MADURAI-625 001 (T. Nadu)

அருட்பா மதுரை தொலைபேசி : 32029

# பதிப்புரை

தற்காலத் தமிழுலகில் தமக்கு ஒப்பாரும் மிக்காருமின்றி ஏறுபோற் பீடு நடை கொண்டு ஏற்றம்பெற்று இலங்கியவர் நாவலர், கணக்காயர், டாக்டர் ச. சோமசுந்தரபாரதியாராவர். அவரெழுதிய நூல்களனைத்தும் தமிழ்ப் பெருமக்கட்குக் கிடைத்த அரிய கருவூலங்கள்! அவற்றுள் ஒன்று 'மங்கலக் குறிச்சிப் பொங்கல் நிகழ்ச்சி'.

"தமிழ்நாட்டில், பல்கலைக் கழகத்தில் தமிழ் மொழியைக் கற்பவர்க்கும், தமிழ், தமிழ்ப்பண்பாடுபற்றி ஆய்வியல் நடத்து-பவர்க்கும் உதவித் தொகை அளிக்க வேண்டும்" என்ற நோக்-கத்தால் 'நாவலர்சோமசுந்தர பாரதியார் கல்வி அறப்பணிக்குழு-ஒன்று 1963 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப் பெற்றது. அக் குழு' வில், திரு. சோ. இலட்சுமிரதன் பாரதியார் (குழுவின் ஆட்சி-யாளர்), திருமதி வசுமதி பாரதியார், திருமதி. ந. மீனாட்சி அம்மையார் எம்.ஏ., டாக்டர் திருமதி லலிதா காமேசுவரன் எம். பி. பி. எசு., பி. எச். டி. (இலண்), திரு. R. S. பாரதி, திரு. கி. பழநியப்ப பிள்ளை, திரு. அ. கி. பரந்தாமனார், எம்.ஏ., புலவர் திரு. க. வெள்ளைவாரணனார், டாக்டர் திரு முத்துச் சண்முகனார் எம்.ஏ., பிஎச்டி., திரு. ச. சாம்பசிவனார் எம்.ஏ., ஆகியோர் உறுப்பினர்களாக உள்ளனர். இந்நூலை வெளியிடும் உரிமையை எங்கட்கு அளித்த அறப்பணிக்குழு உறுப்பினர் அனைவர்க்கும், குறிப்பாக இதன் தலைவராய் இருந்து மறைந்த டாக்டர் சோ. இராசாராம் பாரதியார், உறுப்பினர் திருமதி கி. இலக்குமி பாரதியார் ஆகியோரது குடும்பத்தார்க்கும் எமது நன்றி உரியது.

இந்நூலினை மதுரைக் காமராசர் பல்கலைக் கழக அஞ்சல்-வழிக் கல்வியில் தமிழ் முதுகலை மாணவர்க்குப் பாடநூலாகத் தேர்ந்தெடுத்த பாடநூற் குழுவினர்க்கும், சிறப்பாகத் தமிழ்த்-துறைத்தலைவர் டாக்டர் திரு முத்துச் சண்முகனார் எம், ஏ., பிஎச். டி., அவர்கட்கும், அஞ்சல்வழிக் கல்வித் தமிழ்த்துறைத்

தலைவர் டாக்டர் திரு தமிழண்ணல் எம். ஏ , பிஎச். டி., அவர்கட்கும் எங்கள் உளமுவந்த நன்றியை உளப்படுத்து-கின்றோம். இந்நூலினைச் செப்பம் செய்து நன்முறையிற் பதிப்பித்த திரு, ச. சாம்பசிவனார் எம். ஏ., அவர்கட்கும் எமது நன்றி.

மதுரை— 1
9—9—1979

நாவலர் புத்தக நிலையத்தினர்

# உள்ளுறை

பக்கம்


| | | | |
|---|---|---|---|
| 1. | முதற் பதிப்பு முன்னுரை | ... | vi |
| 2. | முதற் பதிப்பு முகவுரை — நீ. கந்தசாமிப் பிள்ளை | ... | viii |
| 3. | சிறப்புப் பாயிரம் — மு. அருணாசலம் பிள்ளை | ... | xiii |
| 4. | உரிமை உரை | ... | xiv |
| 5. | கதைச் சுருக்கம் | ... | xv |
| 6. | நூல் நயம் — ச. சாம்பசிவனார் | ... | xx |
| 7. | மங்கலக் குறிச்சிப் பொங்கல் நிகழ்ச்சி - நூல் | ... | 1 |
| 8. | பாட்டு முதற்குறிப்பு அகராதி | ... | 62 |

## முதற்பதிப்பு முன்னுரை

இப்பனுவல் முழுதும் இப்போது புதிதாய் நான் எழுதினதன்று. என் "மாரி வாயில்" முன்னுரையில் சொன்னபடி, 1909-ஆம் ஆண்டில் குமரித்துறையில் தொடங்கி முடிவுறாமல் நின்றுபோன 'புதினக்' கதையில் "மங்கலக்குறிச்சிப் பொங்கல் விழா" எனும் தலைப்புடன் சில பாக்கள் எழுதப்பட்டிருந்தன. நான்கு வாரங்களுக்கு முன் அவற்றைச் சில நண்பர் படிக்க நேர்ந்தது. அவர்கள் அப்பாட்டுக்களைப் பாராட்டியதோடு, அக்கதையில் கண்ட பொங்கல் விழா நாளின் நிகழ்ச்சிகளை மட்டுமாவது எளிய நடையில் பாடி ஒரு சிறு பனுவலாக வெளியிடுமாறு வற்புறுத்தித் தூண்டினர். அப்பாக்களைப் படிக்கக் கேட்ட என் பெண்களும், அந்நண்பர் வேண்டுகோளை ஆதரித்துப் பாடித்தரத் தூண்டினர். அதற்கு இணங்கி, 150 பாட்டு வரை இயற்றியும், முன் எழுதியவற்றுட் சிலவற்றைப் பொருத்தம் நோக்கித் திருத்தியும், அமைத்தது இத்தாழிசைக் கொச்சகச் செய்யுள். இப்பாக்களை வண்ணவகை எனக் கொள்ளினும் இழுக்கில்லை.

நண்பர் வற்புறுத்திய நடை எளிமை நாட்டத்தால், இச்செய்யுளில் கவிச்சுவையும் பொருள் வளமும் குறையலாம். உணர்வின் செறிவு நெகிழ்ச்சிக்கேற்ப, இறுக்க இளக்க மொழி ஆட்சி செய்யுளுக்குச் சுவை தரும், ஆனால் பிழை விலக்கி எழுதுவதே பிசகெனக் கருதும் புதிய தமிழர், பாட்டில் மொழிக் கலப்பைத் தவறென வெறுப்பர். ஆதலால், செறிவுக்குரிய செய்யுள் மொழியைச் சுருக்கி, பிழையற்ற பேச்சு வழக்கில் இப்பனுவல் பாக்கள் அமைந்துள்ளன.

இது அகத்திணைச் செய்யுளாதலின், இதில் தலைமக்கள் "சுட்டி ஒருவர் பெயர் கொளப்பெறார்" ஆயினர். இச்செய்யுள் அகப்பகுதியில், 'நிகழ்ந்தது கூறி நிலையல்' எனும் துறையில், தலைவி கூற்றாகும். இது தொல்காப்பியர் கூறும்,

''சேரி மொழியாற் செவ்விதிற் கிளந்து
ஓதல்வேண்டாது குறித்தது தோன்றும்''

''புலன்'' வகையாகும். ''விருந்து'' வகை எனினும் பொருந்தும்.

இப்பாக்களை எழுதி உதவிய நண்பர் வேந்தன்பட்டி வித்துவான் பெரி. சிவனடியான் செட்டியார், அண்ணுமலைப் பல்கலைக் கழக ஆசிரியர் வித்துவான் வெள்ளைவாரணர், இருவருக்கும் கடப்பாடுடையேன். நான் கேளாமலே, அன்புரையாக இதற்குப் பாயிரம் பாடித்தந்த அண்ணுமலைப் பல்கலைக் கழக ஆசிரியரும், புலவர் பரம்பரையினருமாகிய வித்துவான், பத்துநூற்றுப் பொன்பரிசாளர் அருணசலம் பிள்ளை அவர்களுக்கு என் நன்றி என்றும் உரித்தாகும்.

இளசைகிழான்,

ச. சோ. பாரதி.

பசுமலை
15—1—47

## முதற்பதிப்பு முகவுரை

### தமிழறிஞர் திரு. நீ. கந்தசாமிப் பிள்ளை அவர்கள்

---

"மங்கலக் குறிச்சிப் பொங்கல் நிகழ்ச்சி" என மங்கலச் சொல்லும் எதுகை நலமும் தொடர்பு பெற, இன்னிசையோடு கேட்பார் உள்ளத்தைப் பிணிக்கும் தலைப்பைக் கொண்ட இச்சிறு காவியத்தின் ஆசிரியராகிய உயர்திருவாளர், நாவலர், சோமசுந்தர பாரதியார் அவர்களைத் தமிழ் நாட்டிலும், தமிழ்க்கலையும் உணர்ச்சியும் பரவிய பிற நாடுகளிலும் தெரியாதவர் எவருமிலர் என்றே கூறலாம். இவர்கள் இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்தே தமிழ்த் தொண்டாற்றியும், ஆங்கில நூற் புலமையும் பல்கலைப்பயிற்சியும் நிரம்பி உள்ள புலவர் பெருமக்களில் முதலில் வைத்தெண்ணப்பெற்றும் புகழோங்கித்திகழ்ந்தும், இருபெருஞ் செல்வமும் ஒருங்கெய்திய பெரியார் ஆவர். இவர்கள் இளமைப் பருவந்தொட்டே "வண்டல் பயில்வன எல்லாம் வளர்மதியம் சடைக்கணிந்த, அண்டர் பிரான் திருவார்த்தை' என்னும் தெய்வப்புலவர் திருமொழியை ஒட்டி, "வண்டல் பயில்வன எல்லாம் செந்தமிழின் வளம் பேணல்" எனக் கூறும்வண்ணம் தமிழ் நூல்களைப் பயில்தலும் ஆராய்ச்சி செய்தலும், நுணுகி உண்மைகளைத் துணிதலும், பழந்தமிழர் பண்புநலம் கண்டு வீறு கொண்டெழுந்து காண்போரும் கேட்போரும் வியந்து தன்னைப் பின்பற்றித் தமிழ்ப்பணி செய்யும்படி சொல்லாடலும் ஆகிய பொழுதுபோக்கையே மேற்கொண்டு வந்துள்ளார்கள். இதுபோது "தேசியகவி" எனப் பல்லோரும் புகழும் உண்மைத் தமிழ்க்கவிஞர் காலம்சென்ற சுப்பிரமணிய பாரதியார் அவர்களும், நம் நாவலர் பாரதியார் அவர்களும் மதலைப் பருவமுதலே ஒன்றிவாழ்ந்து, இடைவிடாது பல்வகையிலும் தமிழ்ப்பணிகள் செய்தவர்கள் ஆவார்கள். பாவலர் பாரதியார் அவர்கள் கவிவன்மையையும், நாவலர் பாரதியார் அவர்களின் ஆராய்ச்சித் தெளிவையும் சொல் வன்மையையும் இணைத்துப்பேசி மகிழ்வது தமிழறிந்த பெருமக்களுக்கு வழக்கமாக இருந்ததும் இருப்பதும் ஆன உண்மை.

நம் நாவலர் அவர்களின் இளம்பருவச்சூழலும், பள்ளிப்-பருவப் பயிற்சியும், கல்லூரிப் பருவப் பல்கலை வளர்ச்சியும் அவர்களைத் தமிழ் அன்னையின் தனிமகனாக ஆக்குவதற்கு ஏற்றன-வாயிருந்தன. இளமையில் கலைநலம் பெற்ற இளைஞரொடும், கருத்து முதிர்ந்த புலவரொடும், உள்ளம் உயர்ந்த வள்ளல்க-ளொடும் இடைவிடாது பயின்ற இவர்களது நுண்ணறிவும் உள்ள விரிவும் பெருநலமெல்லாம் ஒருசேரப் பெற்று வளம்பட நாளும் வளர்வவாயின பள்ளி, கல்லூரிகளில் நல்லாசிரியர்பால் பயிலுங்-கால் இளமையிலேயே பண்பு பெற்ற இவர்கள் நுண்ணறிவு, ஆன்ற ஆங்கில ஆசிரியர் அன்புறவாலும் பழக்கத்தாலும் தொடர்பாலும் மிகமிக வளர்ந்து உயர்நிலையை அடைவதாயிற்று. இயற்கையாக அமைந்த தமிழ்ப்பற்றும் வீரமும் பண்பட்ட நுண்-ணறிவோடு பரந்த நூற்பயிற்சியும் கலந்து, ஆரம்நிறை பொதி-யிலின் இளங்காலென்ன வளர்ந்து நறுமணத்தொடு தமிழக முழுதும் பரவி நலம் தரலாயின. தமிழ் நாட்டுக்கோ, மொழிக்கோ ஏதேனும் இழுக்கோ இடையூறோ தோன்றுங்காலத்து இவ்-விளங்கால் வெய்ய கோடை மேல் காற்றாகவும் சூறையாகவும் சுழன்று அவ்விடுக்கண்களைத் தூற்றிச் சூழும் கடலில் எறிந்து ஏமம் செய்து மகிழ்வதும் உண்டு.

நம்நாவலர் வழக்கறிஞராகப் பல ஆண்டு தென்பாண்டி நாட்டில் திகழ்ந்து, நாள்தோறும் வளரும் வருவாயைப் பெற்று வந்தும், அதன் பயனையும் புகழையும் சிறிதும் கருதாமல் தமிழ்ப்பணி ஒன்றையே பெரிதும் பேணி, ''யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையம்'' என்னும் தண்ணளியோடு அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்த்தலைமைப் பேராசிரியாக அமர்ந்து தொண்டாற்றிப் பெரும் புகழ் கொண்டதும், அங்கு அவர்கள் தொடர்பால் நூற்றுக்கணக்கான மாணவர் கல்விப் பயிற்சியோடு வீர உணர்ச்சியும் பெற்று உலவுவதும் நம்மவர்க்கெல்லாம் பேரானந்தத்தை விளைவிப்பதாகும்.

ஓய்வுபெற்ற காலத்தில், ''கூடற்குடபால் பரங்குன்றின் பாங்கர் பழனம்சூழ்'' பசுமலையிருக்கையில் அமர்ந்து, நெறியும்

நிரலும் கொண்ட வாழ்க்கையில் தமிழ்த் தொண்டாற்றிவருவது, காண்பவருக்கும் கேட்பவருக்கும் களியூட்டுவதாகும். தம் பெயர்க்கேற்ற பேரழகோடு மதியழகும் பெற்று, முதுமைத் தெளிவும் இளமை உளவளமும் கொண்டு, தம் இருக்கையில் இன்பப் பெருக்கொடு சுவடிகளைத் துருவிப்படிப்பதும், கண்ட உண்மைகளைத் தேனின் இனிய சொல்லில் வேண்டுழி வேம்பும் கலந்து அருகயலிருப்போர்க் குணர்த்துவதும் ஆர்வமுடைய வர்க்கெல்லாம் பேருவகை விளைப்பதொடு, அந்நிலையை மனத் தால் நினைப்பவர்க்கும் அளவிறந்த ஆனந்தம் உண்டாக்கி வருவனவாகும். இப்பெருந்தகையார் தமிழிலும் ஆங்கிலத்திலும் பல அரிய அறிவினிக்கும் நூல்களியற்றி, அவற்றுள் ஒரு சிலவே வெளியிட்டுள்ளார். ஏனையவை எல்லாம் வெளிவரச் செய்வது தமிழ் மக்களின் கடமை ஆகும்.

இப்போது அவர்கள் வெளியிடும் ''மங்கலக்குறிச்சிப் பொங்கல் நிகழ்ச்சி'' என்னும் சிறுகதைச் செய்யுள், தமிழ-கத்தின் தென் பகுதியில் செல்வமிகு வாழ்க்கையின் சில கூறுகளையும், குடிப்பிறப்பின் சால்பையும், இடைநடுவே காணப்படும் எளிய இனிய இயல்பையும், இழிதகவுடையார் பழிவளருள்ளப் பான்மையையும் நல்ல சொல் ஓவியமாய்க் காட்டுவதாகும். பொருட்சிறப்பினும், உண்மை காணும் ஊக்கத்தினும், ஆராய்சித் திறமையினும் வன்மையுற்ற உளக்-கருத்துணர்த்தவரும் சொற்கள் எவ்வளவு எண்ணி முயன்-ருலும் தம் இயற்கை மாறமுடியாதாகலின், இப்பாக்களில் சொல்லின் நொய்மையும் பொருள் எளிமையும் காண இயல-வில்லை. இதை ஒரு குறையாகக் கொள்வதும் ஒண்ணுது. அதுவுமன்றி, இது அவர்கள் விளையாட்டாக எழுதிய செய்-யுளாகலானும், இடையீடுற்ற பல ஆண்டுகளுக்கு முன் பின்னுக இயன்ற பாக்களாகலானும், எல்லோருக்கும் இனிக்-கப்பேசி எளிதில் புகழ்பெற விரும்பாது உண்மை அறநோக்-கில் ஊன்றி உறைத்த உணர்வூறும் உறனுடை உளக்கிளர்ச்சி-யான் எழுவன ஆகலானும், இப்பாக்களை இப்பண்புகளைக் கருதி அளந்தறிவார்க்குப் பல இடத்தும் நலங்காண இயலும்.

“பேசும் மனிதருடன் உலகில் பிறந்து தவழ்ந்து நடந்தோடி, வீசும் பொதியை வளி ஊர்ந்து ... திகழும் தமிழுணங்கு.”

“விருத்தர் வியந்தனர், நன்மடவார் விழியில் அவனை வரவேற்றார்” — “சோதிநிறைந்த முகத்தறிவு சுடரும் விழிகளிலோர் துயரும்” — “அறத்திற் கனியும் உயர்காதல்’ — ‘‘அருளின் உரு ஒளிரும் அறிவே” — “விரல்கள் உளரா என் உளயாழ்ப் பண்ணே” — “பாசி படருவது போலப் படிறுநிறை மனத்தள்” — இவைபோன்ற தொடர்களில் இனிய சொல்லும் கனியும் கருத்தும் ஒன்றி என்றும் உவகை தரும்.

“அறத்தில் கனியும் உயர்காதல்” என்று நம் நாவலர் கூறும்பொழுது காதலின் உண்மை இலக்கணத்தைச் சூத்திர உருவாய் வெளியிடுவது போல் தோன்றுகிறது. காதலின் அடிப்படை அறமே என்பதும், அறத்தில் வேரூன்றாத காதல் கனிதராதென்பதும், அறம் வேரும் அதன் கனி காதலுமாகத் தோன்றும் வழி ஒன்றிலே தான் இனிய காதற்கனி பழுக்கும் என்பதும் அடங்கக்கூறி, அறத்தின் வரம்பும் காதலின் எல்லை இல்லாச் சுவையும் விளக்கி, அறவரைவில்லாது துய்க்கும் காமச்சுவை எந்நாளும் மன்னும் சீரொடு சிறப்பைத் தராதென்பதும், இன்னும் இன்ன இனிய பல உயர்ந்த கருத்துக்களும் ஊன்றிச் சிந்திப்பார் உள்ளத்தில் வியப்பை விளைத்து நயப்பைத் தரும். கனிந்த உள்ளக்கவிகள் எல்லாரும் பொருளொன்றிலேயே கருத்தை நிறுத்திச் சொல்லைப் பொருட்படுத்தார் என்பது கவிச்சுவை உணர்வார் துணிவு என்பதும் இங்கு நாம் நினைவு கொள்ளவேண்டும்.

இது அளவால் சிறு நூலாதலின், யாரும் தாமே இதை முழுதும்படித்து இன்புறவேண்டும் என்றெண்ணி இன்னும் பல எடுத்துரைக்கவிரும்பாது விடுகின்றேன். இந் நூலாசிரியர் ஆராய்ச்சித்திறமும் வாழ்க்கை உயர்வும் இவர்களொடு பயிலும் பேறுடையவர்கள் உவந்து பாராட்டுவதால், தமிழகமுழுதும்

தெரிந்து மகிழும் வண்ணம் தங்கள் ஓய்வுகாலத்தில் தம் வாழ்க்கை வரலாறு ஒன்றெழுதி வெளியிடுவார்களாயின், தமிழ்நாட்டுக்குப் பெரும்பயன் தருவதாகும். தமிழ்ச்சங்கம் அமர்ந்த தமிழ்ப்பெரும் கடவுளாம் ஆலவாய் அண்ணல், நம் நாவலர் அவர்கட்கு நீடிய வாழ்நாளும் வல்லுடலும் ஏனைய இன்பங்களும் மேன்மேலும் வளரச்செய்து தமிழ்ப்பணி இடைவிடாது செய்ய அருளும் வண்ணம், அவன் அடிகளை வணங்குகின்றேன்.

மயிலை
10—2-47

— நீ. கந்தசாமி பிள்ளை

---

இம்முகவுரை எழுதி உதவிய தஞ்சைப் பள்ளி அகர மிராசுதாரும், தெள்ளிய தமிழறிஞருமான — திருவாளர் நீ. கந்தசாமி பிள்ளை அவர்களுக்கு என்றும் கடப்பாடுடையேன்.

— ச. சோ. பா.

# சிறப்புப் பாயிரம்

அண்ணுமலைப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர்

வித்துவான், அருணசலம் பிள்ளை அவர்கள்

அன்புரை

நாவலர், உயர்திரு. சோமசுந்தர பாரதியார் அவர்கள் இயற்றிய 'பொங்கல் விழாப்' பாராட்டுப் பாக்கள்.

"ஆய்ந்தாய்ந்து சொற்பெய் தமைத்த விருந்தினைத்
தீந்தேன்பெய் தட்டதொரு சிற்றுணவா—மாந்தி
உவப்பார் தமிழறிஞர், ஒண்பொருள்தேர்ந் துள்ளம்
உவப்பர் சுவைபெருக்கில் நின்று." (1)

"உலகியலும் மக்கள் உளப்பாங்கும் காதல்
நிலைஅருப்பி முற்றும் நெறியும்—விலக்கில்லா
ஊழின் வலியும் உரைத்திறனும் ஓவியம்போல்
சூழும்இந் நூலகத்தே தொக்கு." (2)

"நாவலர் என்றூர் நவிலும் திறம்கண்டோர்,
பாவலர் என்று பகர்வேமால்—மூவா
மருந்துவிளை சிற்றூர் மருங்கமர்வோர் செய்தி
திருந்த அமைத்தமுறை தேர்ந்து." (3)

"எங்கள்பே ராசான், இசைகிழான், வாகைத்
தொங்கல் புனைசோம சுந்தரன்என்—றெங்கும்
புகலும் பெரியோன் புதிதுபுனைந் தியாத்த
தகவுளநூல் வாழ்க தழைத்து." (4)

(ஒப்பம்) மு. அருணசலம் பிள்ளை

அண்ணுமலைநகர்
8—12—1946

தமிழாசிரியர்
அண்ணுமலைப் பல்கலைக் கழகம்

கோனூர் சமீன்தாரும், பெருங்குடித் தனவணிகச் செல்வரு-
மான — திருவாளர் பெ. ராம. சி. சிதம்பரம் செட்டியார்
அவர்களுக்கு

## உரிமை உரை

"இரவைப் பயந்துநிதிக் கிழவன்
எதனையும் வேண்டாமல் ஈந்து
அரவை அணிந்துமகிழ் அரனுக்
கன்பன் எனஅளகை உறையும்
கரவை இகழ்ந்து,கலை வளர்க்கக்
கருதி உலகில்வரு தரு,பால்
பரவை இகழ்ந்துவிரி புகழார்
பருணிதன் சிதம்பரன் பாரி. (1)

"பாரில் புகழ்விரும்பிப் பலரும்
பணத்தை விரயமிடப் பார்ப்போம்;
காரில்,கைமா றெதுவும் கொடையால்;
கருதா தறிஞர்அற வோர்பால்
நேரில் பழகி பிறர்அறியா
நிலையில் புலவர்பெற நினையாச்
சீரிங் குதவும்வண்மை அறத்தின்
செம்மல், சிதம்பரன்மெய்த் திருவன். (2)

"திருவை அறத்தினும்நல் அறத்தைத்
திருவினும் செய்துயரும் திறலோன்,
பொருவில் தமிழ்கமழும் பாவைப்
பொருளும்பதமும்பதம் பார்த்து,
பருவ மழைமகிழும் பயிர்போல்,
பாடும் புலவர்உளம் உவப்ப
மருவிச் சுவைமதிக்கும் மகிழ்நன்,
மணக்க இப்பாஉரிமைப் படுப்பேன்". (3)

இளசைகிழான், ச. சோ. பாரதி

# கதைச் சுருக்கம்

பொதியமலைச்சாரல்; தெற்குமலைவாரம்; வட்டமலை வளாகம்; அதில் பழமையான சிற்றூர், மங்கலக்குறிச்சி. அங்குக் கண்ணுக்கினிய காட்சிதரும் ஒரு பெரிய வீடு; அது, உயர்குடிச் செல்வ வேளாளர் ஒருவருடையது. அதைப் பண்ணையார் மாளிகை என்பர். பண்ணையார் புகழொடு வாழ்ந்து மாண்டனர். அவருக்கு மக்கள் இருவர். மூத்தவர் அமைதியும் அருளும் நிறைந்தவர். அவருக்கு ஆண்மகவில்லை; இளையவர் நடுவயதில் காலமானார். அவருக்குப் புதல்வர் இருவர், புதல்வியர் இருவர் பிறந்தனர். அவருள் மூத்தவரின் முதல் மனைவி மகப்பேறின்றி மரித்தாள். மகவாசையால் தன் முதுமை கருதாது ஓர் ஏழைப் பெண்ணைப் பொருள்கொடுத்துப் பெற்று மறுமணம் புரிந்தார். சில ஆண்டு கழிந்து பிள்ளை இல்லாமலே இறந்தார். இளையவர் சமர்த்தர், அறம் திறம்பா உளத்தர். தனக்கு மனமொத்த பெருங்குடிப் பெண்ணை மணந்து வாழ்ந்து வந்தார். தமையரின் இளையாள் தன்னைத் தவருக விரும்ப, இணங்காமல் மறுத்தார். அதை வெறுத்த இளையாள் தன் கணவருக்குத் தலையணை மந்திரம் ஓதினள். அவர் தம்பிபால் மனம் மாறுபட்டார். அது கண்ட இளையவர், சூல்கொண்ட தன் மனைவியுடன் வெளியேறி இலங்கை சென்று தங்கினர். பெரும் பொருளீட்டினர்.

அங்கு அவருக்கு மகன் பிறந்தான். அவன் பிள்ளைப் பருவம் செல்வ விளையாட்டில் கடந்தது. பள்ளிப் பருவம் படிப்பிலும் உடற் பயிற்சியிலும் நடந்தது. பிறகு அவனைத் தந்தை உயர்தரக் கல்விக்கு மேல்நாட்டுக் கனுப்பினர். அங்குக் கலைகளில் முதன்மை பெற்று மீண்டான் சால்புகள் மிகுந்த அவனுல் தங்கள் பழங்குடிப் பெருமையைப் புதுக்கிப் பெருக்க விரும்பினள் அவன் தாய். தங்கள் தாய் நாட்டில் அவன் நல்ல பதவி பெற்று வீறு பெறச் செய்யும்படி தன் கணவரை வேண்டினுள். அவரும் உடன்பட்டு முயன்று உதவினர்.

பிறகு மகனை முதலில் மங்கலக்குறிச்சியில் பெரிய பாட்டரை வணங்கி, அவர் வாழ்த்துப் பெறும்படி அனுப்பினர். அவனும் அங்குப் போந்தான். பேரன் பாட்டரைக்கண்டு தண்டனிட்டான். அவரும் அவனை மகிழ்ந்து வரவேற்று வாழ்த்தினர். அவனே நம் பாட்டுத் தலைவன்.

மூத்தவரின் இளையாள், தன் கணவர் பண்ணைச் சொத்துக்கள் அனைத்தையும் தானே கவரக்கருதினள். தன் தந்தை கணவருக்குக் கடன் கொடுத்ததுபோலவும், அக் கடனுக்குப் பண்ணைச் சொத்து முழுமையும் கணவர் விற்றது போலவும், சில 'மலாணை'ப்பத்திரங்கள் பிறப்பித்தாள். தந்தையிடமிருந்து சொத்துக்களைத் தன் பெயருக்கு எழுதிவாங்க எண்ணினள். தற்செயலாய் அவள் தந்தை இறந்தார். சொத்துக்கள் தன் மாற்றுந்தாய் மகனான அண்ணருக்கு இறங்கும் என அறிந்து அஞ்சினள். அண்ணரிடம் அதிக அன்பு காட்டினள், பிறகு மெல்லப் பத்திரங்களைப்பற்றிக் குறிப்பிட்டாள். 'கணவரின் தாயத்தார் சொத்துக்களை அடையாமல் தடுக்க அப் பத்திரங்கள் பிறப்பிக்கப் பெற்றன; தந்தை தன் பெயருக்கு மாற்று முன் இறந்தார். தாங்கள் அவற்றை எனக்கு மாற்றித் தரவேண்டும்,'' என்று, அண்ணரை அவள் நெருக்கினள். தங்கையின் வஞ்சம் அறிந்தார் தமையர். தந்தைபேரால் வந்த சொத்தும், தான் தேடிய பொருளும் தனக்குப்பிறகு தன் ஒரே மகளுக்கும் அவள் கணவனுக்கும் ஆகும்படி மரணமுறி (Will-ஓயில்) எழுதினர். அதுவும், வயது வந்து அவள் விரும்பும் கணவனை மணந்தால் மட்டும் ஆகும் என்றும், அன்றேல் அச்சொத்துக்கள் தனக்குதவி செய்த தன் இளைய மைத்துனர் வழியைச் சேரும் என்றும் வரையறுத்தெழுதினர். அதை அறிந்த தங்கை சினந்து தமையரையும் அவர்மனைவியையும் நஞ்சு அருத்தி மாய்த்தாள். அவள், கணவன் இறந்தபிறகு, தன்தாய்வழியில் ஏழை உறவினனான பண்ணை உழவனோடு உறவாடிக் கருவுற்றாள். ஊர் அலருக்கு உட்கினள். தல யாத்திரைக்குப் புறப்பட்டாள். அயலூரில் ஒரு மகனைப் பெற்றாள். உழவன் தங்கை ஒரு கைம்பெண்ணுக்குப் பணம் கொடுத்து,

அம்மகவை அவள் மகனாக வளர்க்கச் செய்து திரும்பினாள். சில ஆண்டு கழிந்து, தன் மகனை அவ்விதவையிடம் வாங்கி, பிள்ளையில்லாத கணவர் குடிக்கு ஊரறியப் பிள்ளை கூட்டி வைத்துக் கொண்டாள். தன் மகனுக்குத் தனக்குப்பின் அத்தனை சொத்தையும் சேர்க்க வேண்டும் என்பது அவள் ஆசை. அதற்காகத் தன் தமையன் மகளை அம்மகனுக்கு மணம் செய்து, அவளோடு சொத்தை எல்லாம் அவனடையச் செய்ய எண்ணினாள். அதற்காக அம்மருகியைக் கொல்லாமல் தன் ஆதிக்கத்தில் வைத்து வளர்த்தாள். அப்பெண்ணே இப்பாட்டின் தலைவி.

இவ்வாறிருக்க, பொங்கல் விழா வந்தது. விடியும் வேளையில் ஆற்றுக்கு "தை நீ" ராடச் சென்றாள் தலைவி. இருட்டில் வழுக்கிச் சுருட்டும் சுழியில் விழுந்தாள். வெள்ளம் இழுத்தது. அந்நேரம் குளிக்கவந்த தலைவன் கரையில் நின்றான். ஆற்றில் குதித்து விழுந்தவளை ஏந்தி நீந்திக்கரைசேர்த்தான். இவ்வாறு ஒருவரை ஒருவர் கண்டு காதல் கூர்ந்தார். எனினும், அங்கே அவளிடம் அந்நிலையில் தனியே பேசுவது தகுதி அன்றென நினைத்துப் பெருந்தகை பிரிந்தான். தலைவி தன் வீடுபோந்தாள். அங்குப் பொங்கல் உண்டாட்டு முடித்தது.

அவ்வூரில் மாலையில் ஐயனார் கோயில்முன் வழக்கமாய் நடக்கும் விடலையர் போட்டி விளையாட்டைப் பார்க்கப் போகும் மகளிரொடு தலைவியும் வந்தாள். போட்டியில் எல்லோரையும் விடத் தலைவன் சிறந்து வாகை சூடி விளங்கினான். அன்றங்குப் புதிய வேங்கை ஒன்றையும் தனியே மலைந்து கொன்று அருந்திறல் காட்டினான். அதனோடு தன் விற்றிறமும் விறகமும் விளங்க ஒரு முல்லைக் கொத்தை அம்பால் எய்து தலைவி குழலில் செருகினான். யாவரும் அவனைப் போற்றினர். விளையாட்டு முடிந்ததும் தலைவி வீடு போந்தாள். அவள் மாமி, அரங்கில் நடந்ததை அறிந்து தலைவியையும் அவள் மாண்ட தாயையும் பலவாறு பழித்தாள். அப்போது அங்குவந்த முதியளான தலைவியின் சித்தி அம்மாமியைக் கடிந்து, அவளின் பொல்லாங்குகளை எல்லாம் எடுத்து விரித்து இடித்துரைத்தாள். அன்று முற்பகலில் தலைவி வளையை

உழவன் திருடியது வெளிப்பட்டு, அவனைக் காவலர் பிடித்து அடித்தனர். அடிபொறாமல் குடி வெறியில் மாமியின் காதகக் கதைகளைக் கக்கினான். அவைகளையும் அம்முதியோள் தன் மைத்துனிக்கு விளக்கி, விரைவில் தூக்குத்தண்டம் அவளுக்குக் கிடைக்கும் என அறைந்து அச்சுறுத்தினள்.

அதற்கிடையில் தலைவனுக்கு வெற்றிமாலை சூடி, இளைஞர் அவனை ஊர்வலமாக உலாவரச் செய்து பாராட்டினர். அதைப்பொறாமல் கைம்பெண் பெற்ற கயமகன் தலைவனைக் குத்தினான். இளைஞர் குத்தினவனைக் குமைத்துக் காவற்கூடத்தில் அடைத்தார். தலைவனை மருத்துவர் புண்ணைத்தைத்துப் பாட்டர் வீட்டில் சிகிச்சைசெய்தார். உணர்விழந்த தலைவன் மயக்கத்தில் தலைவி பெயரைச் சொல்லிப் புலம்பினான். மருத்துவர் சொல்படி பாட்டர் அனுப்பிய மருத்துவப்பெண், தலைவியின் மாமி வீட்டில் வந்து தலைவிக்கு அவன் நிலைமையை அறிவித்தாள். தலைவியும் அவள் சித்தியும் மருத்துவப் பெண்ணும் பாட்டர் மாளிகைக்கு வந்தனர். அங்கே மருத்துவர் தூண்ட, பாட்டர் வேண்ட தலைவி பரிவால் தலைவனை அருகமர்ந்து இங்கித இன்னுரைகளால் உயிர்ப்பித்தாள். அவனும் தெளிந்தான். தனித்த இருவரும் காதலால் உளங்கலந்தொன்றி உவந்தனர். பாட்டரும் சித்தியும் வாழ்த்தினர். மாமி தனக்கு வரும் தண்டனைக்கு அஞ்சித் தற்கொலை செய்து மாண்டாள்.

இவ்வாறு நிகழ்ந்தவற்றைத் தலைவி, மணந்து மனைமாண்பு பெற்ற வாழுங்கால், தன் தோழிக்குக் கூறினாள். அக்கூற்றே இச்செய்யுளின் பொருள்.

# மங்கலக் குறிச்சிப் பொங்கல் நிகழ்ச்சி - நூல் நயம்

ச. சாம்பசிவனார், எம். ஏ., தமிழ் விரிவுரையாளர்,
அஞ்சல்வழிக் கல்வித்துறை, மதுரைக் காமராசர்
பல்கலைக் கழகம், மதுரை.

---

முன்னுரை:

'நாடு, மொழி, இனம், இம்மூன்றின் உயர்வுக்குப் பாடுபட்ட உரவோர் சிலருள் நாவலர் — கணக்காயர் — டாக்டர் ச. சோமசுந்தர பாரதியாரும் ஒருவர்! தமிழ் இலக்கியத் திறனாய்வில் தலைசிறந்த பேரறிஞர். ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியத்திற்கு உரைகண்ட வித்தகர். வள்ளுவரின் வரலாற்றை உலகிற்கு உணர்த்திய பேராசிரியர். 'இவர் யாத்த படைப்பிலக்கியங்களில் ஒன்று இம் 'மங்கலக் குறிச்சிப் பொங்கல் நிகழ்ச்சி'! இதன் 'நூல்நயங்' குறித்து ஒருசில ஈண்டுக் காண்போம்.

**காப்பியர் வழியில்:**

யாப்பின் இலக்கணம் இயம்பவந்த தொல்காப்பியர்

"பாட்டுரை நூலே வாய்மொழி பிசியே
அங்கதம் முதுசொல் அவ்வேழ் நிலத்தும்
வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்
நாற்பே ரெல்லை அகத்தவர் வழங்கும்
யாப்பின் வழிய தென்மனார் புலவர்"[1]

என்பர். 'வண்புகழ் கொண்ட சேர சோழ பாண்டியர் ஆண்ட இத் தமிழகத்து வழங்கி வரும் யாப்பு எழுவகைப்படும். அவையாவன: பாட்டுயாப்பு, உரையாப்பு, நூல்யாப்பு, வாய்மொழியாப்பு, பிசியாப்பு, அங்கத யாப்பு, பழமொழி யாப்பு. இவ் வேழினுள் 'உரையாப்பு என்பதும் ஒன்று. இவ் 'உரையாப்பு' நால்வகைப்படும்.

---

1. தொல்: செய்யுளியல்: 75.

"பாட்டிடை வைத்த குறிப்பினானும்
பாவின் றெழுந்த கிளவி யானும்
பொருள்மர பில்லாப் பொய்ம்மொழி யானும்
பொருளொடு புணர்ந்த நகைமொழி யானுமென்
றுரைவகை நடையே நான்கென மொழிப"[1]

என்பர் ஆசிரியர். இந்நான்கினையும் இரண்டு வகையாகப் பகுப்பர். "பாட்டிடை வைத்த குறிப்பு, பாவின் றெழுந்த கிளவி ஆகிய முன்னைய இரண்டும் ஒரு பகுதி; பொருள் மரபில்லாப் பொய்ம் மொழி, பொருளொடு புணர்ந்த நகைமொழி ஆகிய பின்னைய இரண்டும் ஒருபகுதி"ஆம். இதற்கு இளம்பூரணர், பேராசிரியர் கூறும் உரைக் குறிப்பினை நோக்குமிடத்துப் பண்டைத் தமிழ்ப்பெரு மக்களிடத்தே கதை கூறும் வழக்கம் இருந்து வந்ததென்பது தெளிவாகும். ஒரு "யானையும் குதிரையும் தம்முள் நட்புக் கொண்டன; இவ்விரண்டும் இன்னவழியிற் சென்றன; இன்னவாறு செய்தன" என்று இளம்பூரணர் விளக்குவர். தலைவன், 'பொருள்வயிற் பிரிதல்' முதலிய பிரிவுகளைமேற் கொண்டபோது தலைவி வருந்தியிருப்பளன்றே! அப்போது செவிலியானவள், அவளைத் தேற்றுதற் பொருட்டுக் குறியவும், நெடியவுமான கதைகளைக் கூறி நகுவித்துப் பொழுது போக்குவள்!

"செம்முகச் செவிலியர் கைம்மிகக் குழீஇக்
குறியவு நெடியவு முரைபல பயிற்றி
யின்னே வருகுவ ரின்றுணை யோரென
உகத்தவை மொழியவு மொல்லாள்"[2]

என்ற சான்றினைக் கூறிப் பேராசிரியர் விளக்குவர். எனவே இக்காலச் சிறுகதை, தொடர்கதை போன்ற கதைகளை அக்-காலத்தும் கூறி வந்தனர் என்னும் இவ்வுண்மை போதரும்.

---

1. தொல்: செய்யுளியல்: 166.
2. நெடுநல்வாடை : 153 156.

தொல்காப்பிய ஆழ்கடலில் முத்தெடுப்பதில் வல்லவரான நம் நாவலர் பாரதியார், இவ்வுண்மையை ஓர்ந்தே 'மங்கலக் குறிச்சிப் பொங்கல் நிகழ்ச்சி' எனும் 'செய்யுட் கதை'யைப் புனைந்துரைப்பாராயினர்.

"நிகழ்ந்தது கூறி நிலையலுந் திணையே"[1]

என்றும் நூற்பாவுக்கேற்பத் தலைவிகூற்றாக யாக்கப்பட்டது என்று கூறுவர் நாவலர் பாரதியார். ஆனால் இவரே, இந்-நூலின் 'கதைச்சுருக்கத்'தில், "இவ்வாறு நிகழ்ந்தவற்றைத் தலைவி, மணந்து மனைமாண்பு பெற்று வாழுங்கால் தன் தோழிக்குக் கூறினள். அக் கூற்றே இச் செய்யுளின் பொருள்" என்று குறிப்பிடுவதை எண்ணுங்கால். 'கற்பின்-கண் தலைவிகூற்று' எனக் கொள்ளினும் இழுக்கன்று.

"அவனறி வாற்ற அறியும் ஆகலின்
ஏற்றற் கண்ணும் நிறுத்தற் கண்ணும்"[2]

என்ற நூற்பாவின்படி, தலைவனது பண்பினைத் தலைவி நிறுத்துக் கூறுவாள் ஆதலின், இக் கூற்றும் இதன்பாற்படும் எனலாம்!

"மக்கள் நுதலிய அகன்ஐந் திணையும்
சுட்டி ஒருவர்ப் பெயர்கொளப் பெறாஅர்"[3]

என்ற இலக்கண வழிக்கேற்ப இந்நூலிலும் தலைமக்கள் இயற் பெயர் சுட்டப்படவில்லை! தொல்காப்பியர் செய்யு-ளுறுப்பில் எண்வகை வனப்பினை எடுத்து மொழிகின்றார். அவ்வெட்டனுள், 'புலன்' என்பதுமொன்று. "வழக்கச் சொல்லினானே தொடுக்கப்பட்டு ஆராய வேண்டாமற்

1. தொல். அகத்திணையியல் : 47
2. தொல்காப்பியம்: கற்பியல்: 6
3. ,, : அகத்திணை : 57

பொருள் தோன்றுவது'' என்பது இதன் இலக்கணம்.[1] இதற்கேற்பவும் இந்நூல் அமைந்துள்ளது. அல்லது

''விருந்தே தானும்
புதுவது புனைந்த யாப்பின் மேற்றே''[2]

என்பதற்கேற்ப 'விருந்து வனப்பு' எனினும் அமையும்!

**தமிழின் தனிமாண்பு:**

193 பாக்களைக் கொண்ட இந்நூலைத் 'தமிழ் வாழ்த்-து'டன் தொடங்குகின்றார் ஆசிரியர்.

''பேசும் மனிதருடன் உலகில்'' (1) என்ற பாடல் தமிழின் தனிமாண்பினை மொழிகின்றது. 'மனிதர்கள் என்று பேசத் தொடங்கினார்களோ, அன்றே அவர்களுடன் தோன்றி, அவர்களுடனேயே தவழ்ந்து நடந்து விளையாடிப், பொதியில் தென்றலில் ஊர்ந்து, இயல் இசை வளரத் திகழ்பவள் தமி-ழணங்கு! 'அறிவு' தலைவன் என்றால், மொழிகள் அனைத்தும் அவனின் கிழத்தியர்கள்; ஆனால் அவன் முதன்முதல் மணந்த காதலறத் தலைவி — தமிழ்மகளே! அத்தகு அணங்-கைத் தொழுவோம் என்ற பொருள்பட அமைந்தது இப் பாடல்! தமிழின் தனிமாண்பினை இவ்வகையில் எடுத்து மொழிந்தவர் வேறு யாருமில்லை எனலாம்!

**இயற்கையின் எழில் நலம் :**

'நிலமும் பொழுதும்' என்ற தலைப்பில், இயற்கையின் எழில் நலத்தைப் பாடுகின்றார் பாவலர்.

''வானம் வறப்பினுங் குன்றாத
வளங்கெழு தென்பொதியை வாரம்
கானம் கனிகளொடு தேனும்
கரும்பொடு நெல்வயலும் ஈனும்'' (1)

---

1. தொல்: செய்யுளியல்: 233
2. தொல்: செய்யு.' 231

"ஏலம் கிராம்பு கருவாயும் ...
ஓயா தொழுகி அகழ் ஓம்பும்" (2)

"வெள்ளி முளைத்துவிடி யாமுன்" (5); "கான்யாற்று வெள்ளத்தை" (9); "நீரில் கயல் உறங்கும் நெடிய நிலத்துக் கழுதுறங்கும்" (166); "சேவல் சிறகடித்துக் கூவ" (181); "வெள்ளை மலரினங்கள் குவிய" (182) முதலான பலபாக்களில் இயற்கைக் காட்சி இயம்பப்படுகின்றது.

**காதலோ காதல்:**

காதல் இன்பத்தைக் காட்டுதற் பொருட்டே இந்நூல் எழுதப்பட்டது. பண்டைத் தமிழர்கள் சிறப்பாகக் கொண்டாடிய தைந்நீராடலில் கதை தொடங்குகின்றது. வெள்ளி முளைத்து விடியாமுன் விழவுத் தைந்நீராட விரைந்து சென்ருள் தலைவி; இருட் சோலை ஆற்றில் இறங்கினுள்; வழுக்கி வெள்ளத்தில் வீழ்ந்தாள். அதனைக் கண்ணுற்ற தலைவன், அச் சுழி வெள்ளத்தில் குதித்தான்; அவளைத் தாங்கினுன்; கரை ஏறினுன்; குராமரத்தடியில் படுக்க வைத்தான். இருவர் கண்களும் கவ்விக் கொண்டன. 'கலக்கம் கொள்ளல்' எனக் கூறி மறைந்தான்.(4 - 7) இது, தொல்காப்பியர் கூறும் களவின் முதல் நிகழ்ச்சியாகிய 'காட்சி' என்பதை நினைப்பூட்டுகின்றது.

பொங்கல் விழாப் போட்டியின் போது பங்குபெற்று வாகைபல சூடிய தலைவன், விரைமுல்லைக் கொத்தொன்றை வில்லால் தொடுத்துத் தலைவியின் குழலில் இறுகச் செறித்தான்.(16) பரிமீது ஊர்ந்து உலாவந்தபோது அவன் செருகிய அதே மலர்க் கொத்தைத் தன்கைகளால் எடுத்து, அவன்மீது வீசினுள் தலைவி, தலைவன் குத்துண்ட நிலையறிந்து துடிதுடித்த தலைவி அவனை உயிர்ப்பிக்க உறுதுணை புரிந்தாள்.

"காலை எனதுயிரைக் காத்த
காளைஎன் தீயவுடல் தீட்டால்
மாலை உயிர்துடித்து வருந்த
வாளா அமைந்திருக்க மாட்டேன்!
வேலை வளைந்தபுவி மீது
வெல்லும் அறம்எனுஞ்சொல் மெய்யேல்
பாலை என்பாற்படுத்தி ஏந்தல்
பல்லாண்டு வாழ்வரம் பெறுவேன்!" (72)

எனப் புகல்கிருள். அவ்வாறே, அவன் அருகில் அமர்ந்து இன்னுரை சாற்றி, அசையவிடாமல் இருக்கச் செய்து உயிர்ப்பித்தாள். உணர்வு தெளிந்த அவன், "தானுள என் உளத்தை வென்ருள் தரணி தனில்ஒருத்தி இவளே!" (89) என்று பாராட்டினுன். "உடலும் உயிரும் உமதுடைமை, ஒருவாது எனைக்கொளல்நும் கடமை!" (95) என்கிருள் தலைவி. அவனே, அவள் கண்ணைத் துடைத்து நுதல் நீவிக் கதுப்பை இழுத்து முத்தம் இட்டு" (102)

"அன்பே! எனதுயிர்ப்பெண் அழகே!
அருளின் உருஒளிரும் அறிவே!
இன்பே! எனக்குதவ மலர்விட்
டிறங்கி எழுந்தருளும் திருவே!" (105)

என்று பாராட்டினுன். பின்னர் இருவர்க்கும் மணவினை நிகழ்ந்தது!

உவமை முத்துக்கள்:

இந் நூற் கடலிடையே பல்வேறு உவமை முத்துக்கள் பளிச்சென ஒளிவிடுகின்றன. சிலமட்டும் இவண் காட்டலாம்:

"கையில் மகவெடுக்கும் தாய்போல், காளை ஒருவனெனைத் தாங்கி" (6); "புத்தப் புதுப்புலியை அடர்க்கப், புகுந்த இளஞ்சிங்கம் போல்வான்" (14); "இல்லாத செல்-

வம்எய்தி யிழந்த ஏழை எனஏங்கி'' (17); "வள்ளி தனை-முருகன் விரும்ப வானத் தரசன்மகள் வெதும்பிக் கள்ளி எனப்பழித்த கதைபோல்'' (28); ''வானத் துருமாறும் முகில்போல் மாறிக் குழல்வேய்ந்து களிப்பாள்'' (39); "நத்தி விலக்குபவர் இன்றி நாயை அடிப்பதுபோல்'' (55); ''வெருளு மதலைஎன அழுது'' (69); ''வானத் துளிவிரும்பும் புள்போல்'' (79); ''பண்கள் மிசைவிசும்பில் அறுகாற் பறவை திரிவதென மிதந்து'' (82); ''சொலும் தொடங்கி இடைமுறிவும் தொடுத்த தொடர்மொழியும் ஆக'' (83); ''செய்ய வேளும் வள்ளியும்போல் இனிது வாழ்வீர்'' (128); ''கன்று பிரிந்தபசுப் போல'' (162); ''மத்தால் உடைதயிரும் வானில் மதிமுன் இரிஇருளும் போல'' (174); ''பின்னை நீ கண்ணன் அவன் என்றும் பேராத காதலுடன் வாழ்வீர்!'' (178) ஆகிய உவமைகள் வந்துள்ளன.

அறநெறிகள்:

'பெண்ணுக்கு உரிமை வேண்டும்' என்பதை ஆசிரியர், ''வானாட்டு மாட்சிசொலி மண்ணீல், வாழ்வுரிமைபெண்களுக்கு மறுக்கும் தாநாட்டு நூல்கள்'' என்ற அடிகளில் சுட்டுகின்றார் (38). 'பழியொடு படரும் சூழ்ச்சி நெடிது நிற்காது' என்பதை, ''இடிந்து விழுந்த துங்கள் சூழ்ச்சி, இன்றேதொடங்கிற்றுங்கள் வீழ்ச்சி'' (50) என்ற அடியால் காட்டுவர். 'நல்லவர்க்கு அற-மே துணை' என்பதை, ''நல்லார்க்கு அறம்துணைய தாமேல், ......பொல்லாச் சுரம் குறைந்து போதம் பொலியப் புண்நோ-வொழியக் காண்போம்'' (64) ''வெல்லும் அறம்எனுஞ் சொல் மெய்யேல்'' (72) என்ற தொடர்களாலும், 'எல்லாம் இறைவன் செயல்' என்பதை ''எல்லாம் இறைவனருள் நம்மால் இயல்-வதைச் செய்வது நம் கடமை'' (64) என்ற தொடராலும் அறியலாம். 'அவரவர்க்கு ஏற்ற படியை அளப்பான் ஆண்டவன்' என்ற கருத்தை,

''நித்தம் தொழுங்கடவுள் மக்கள்
நினைத்த தனைத்துந்தர வில்லை;

நத்தும் பொருள்களுள்அவ் அவர்க்கு
நன்மை பயப்பவற்றை நல்கும்'' (91)

என்ற அடிகள் விளக்குகின்றன. ஊழ், அறம் இவற்றின் உயர்வை ''பாலே என்பாற் படுத்தி ஏந்தல், பல்லாண்டு வாழ வரம் பெறுவேன்'' (72) என்பதனுலும்,

''முன்னே அறம் முடிந்த முடிச்சு;
மூர்க்கர் இதைஅவிழ்க்க முயன்ருல்,
பின்னே அறம்அழிக்கும் அவரை'' (128)

என்பதனுலும் ஆசிரியர் வற்புறுத்துகின்ருர். இத்தகு அறநெறிகள் பலப்பல புகலப்படுகின்றன.

தெரிந்த மொழி :

தொல்காப்பியர் கூறும் 'புலன்' வனப்புக்கேற்ப இக் கதை நூலில் சேரிமொழி' அல்லது 'தெரிந்த மொழி' மிக்குக் காணப்படுகின்றது. ''தீட்டைத் தொலேக்க (8); கள்ளி (28), (31); காது கசக்கும் அவள் வசவு (40); குமைத்தாய் (45); குமைக்க (55); மடியில் கனம் இல்லே (49); ஏமாறித் தங்கை (52); கோலாகலச் சதுர அறை (60); அக்காள் (63); தழுதழுத்து (65); விருதா (98); புடைவை (102); ஆட்டைத் திதி (121); அறுதலிகள் (131); சித்தி (135); உல்லாசப் பேர்வழி (151); வேசை (156); மதினி (185); முதலான சொற்கள் இதற்குச் சான்று!

ஓசை நயம்:

பாடல்கள் அனைத்துமே எதுகைத் தொடை அமைந்து எழிலூட்டுகின்றன. சிற்சில பாக்கள் ஓசை நயம் பெற்றுத் துள்ளியாடுகின்றன.

சான்றுக்கு ஒன்று கூறலாம் :

''பெருமை நுமதுரிமை; நாணம்
பேதைஎன் பெண்மைமடத் தியல்பு;

அருமை நுமதுரிமை ஆதல்
அஞ்சி அயரும்என துள்ளம்;
ஒருமை எனதுமன தல்லால்
ஒத்த உரிமைபிறி தில்லேன்;
இருமை நிலையிலும்என் உயிர்நும்
எளிய உடைமைஎன எண்ணீர்'' (96)

என்று தலைவி பேசுவதாக வரும் இப்பாடலில் ஓசைநயம் மட்டுமன்றித் தலைமக்களின் பண்பு நலன்களும் பாடப்பட்டுள்ளன 'பெருமையும் உரனும் ஆடூஉ மேன' ''அச்சமும் நாணும் மடனும் முந்துறுதல், நிச்சமும் பெண்பாற் குரிய என்ப''[1] என்ற தொல்காப்பியர் கூற்றினையொட்டி ஈண்டும் தலைமக்களின் பண்புகள் மொழியப்பட்டன எனலாம்!

முன்னோர் மொழி பொருள் :

முன்னோர் மொழிந்த பொருளைப் பொன்னே போற் போற்றுதல் தமிழ்ப் புலவர் கடன்.[2] நம் நாவலரும் இந் நூலில், வள்ளுவர், இளங்கோ, கம்பர், போன்றோர் கருத்துக்களைத் தக்கவாறு எடுத்தாண்டுள்ளார் எனலாம்! ''தொடலைக் குறுந் தொடி'' (33); ''கொடிறுடைக்க'' (46); ''விழியில் உறை பாவாய்'' (124); ''காலையில் காட்சியினில் அரும்பிக் கழியும் பகற்பொழுதில் போதாய்; மாலை மலர்ந்தஉளக் காதல், மாடுழக்க வாடுமலர் நிமிர்ந்து'' (167) முதலான பகுதிகள் திருவள்ளுவர் கூறும், ''தொடலைக் குறுந்தொடி தந்தாள்'' ''கொறுடிடைக்கும் கூன்கையர்''; 'கருமணியாற் பாவாய்''; ''காலை அரும்பிப் பகலெல்லாம் போதாகி, மாலை மலரும்''[2] முதலான குறட்பாக்களை நினைவுபடுத்தும்.

தலைவன், தன் தலைவிநலம் பாராட்டுவதாக வரும்,

'வானே! வறுமையுற எனக்கு
மகிழ்வு மழைக்கும்விழி மடவாய்

1. தொல் : களவியல் : 7, 8.
2. திருக்குறள் : 1135; 1077; 1227.

தானே தனைஎனக்குத் தந்து
சாகும் உயிர்தழைக்கச் செய்தீந்
தேனே! என்உள்ளமலர் உறையும்
திருவே! மனவனத்தில் உகளும்
மானே! உயிர்குளிர ஒளிரும்
மதியே! எனதுபுது வாழ்வே!'' (123)

என்ற பாடல், இளங்கோவடிகளின் ''மாசறு பொன்னே! வலம்புரிமுத்தே! காசறு விரையே! கரும்பே! தேனே!''[1] என்ற பகுதியை நினைவூட்டுகின்றது.

''நீரில் கயல்உறங்கும் நெடிய
நிலத்துக் கழுதுறங்கும்...' (166)

என்ற அடி, கம்பனின் ''நீரிடை உறங்கும் சங்கம் நிழலிடை உறங்கும் மேதி''[2] என்ற பாடலைப் பின்பற்றியது! இங்ஙனம் பலப்பல காட்டலாம்.

மெய்ப்பாட்டுறுப்பு :

தொல்காப்பியர் கூறும் செய்யுள் உறுப்புக்கள் முப்பத்து நான்கனுள் 'மெய்ப்பாடு' என்பதும் ஒன்று உண்டன்றோ? இந்நூலிலும் மெய்ப்பாட்டுறுப்பு அமைந்து கற்பார்க்குக் கழிபேருவகை நல்குகின்றது.

அகத்திற்கு உரிய மெய்ப்பாடுகளில் 'நகுநய மறைத்தல்' 'கூழை விரித்தல்' என்பனவும் உண்டு.[3] ''தலைவன் தன் கணையால் தலைவிக்குக் கண்ணி சூட்டினான். ஆண்டு நின்ற பெண்டிர் அலர் தூற்றுவரே என்றஞ்சிய தலைவி, புன்முறுவலை வெளிக்காட்டாது மறைத்தாள்; காதலால், கருமை நிறைந்த

1. சிலப்பதிகாரம் : 2 : 73-74.
2. கம்பராமாயணம் : 1 : 2 : 44
3. தொல். மெய்ப் 13, 14.

கூந்தல் அவிழ்ந்தது'' என்ற பொருள்படப் பின்வரும் பாடல் அமைகிறது :

“ நல்லார் முகத்தில்அலர் நகைக்கு
நாணி முகிழ்க்குமகிழ் மறைத்தேன்;
அல்லார் அளகநெகிழ் மடவார்
அங்கென்னைத் தங்கண்ணுற் பழித்து ...'' (17)

இவ்வடிகளில் நாவலர் பாரதியார், மேற்காட்டிய இரண்டு மெய்ப்பாடுகளைக் காட்டியுள்ளார்.

“ காலை எனதுயிரைக் காத்த
காளைஎன் தீயவுடல் தீட்டால்
மாலை உயிர்துடித்து வருந்த,
வாளா அமைந்திருக்க மாட்டேன்!'' (72)

எனத் தலைவி கூறும் கூற்றில் ‘அழுகை' எனும் மெய்ப்பாடு தோன்றுகின்றதல்லவா? இப்படிப் பல காணலாம் !

ஆசிரியர் கனவு :

இந்நூல் வாயிலாக நாவலர் காணும் நற்கனவு யாது? இதோ அவரே கூறுகின்றார் :

“ வாழ்க உலகு அறமும் ஓங்க,
வறுமை பசிபிணிகள் நீங்க,
ஆழ்க அழிவு தரு தீமை
அச்சம் கொடுமை வஞ்சம் அழிக !
வீழ்க பருவமழை என்றும்
விளைக உணவு பொருள் இன்பம்
சூழ்க தமிழினொளி எங்கும்
துன்பம் தொலைக தொழில் உயர்க! (வாழ்த் :2)

ஆசிரியர் கண்ட கனவு நனவாகட்டும் என வாழ்த்துவோமாக !

## முடிவுரை :

சுருங்கச் சொன்னால் இந் நூலகத்தே 'உலகியலும், மக்கள் உளப்பாங்கும், காதல் நிலை அரும்பி முற்றும் நெறியும், விலக்கில்லா ஊழின் வலியும் உரைத்திறனும் ஓவியம்போல்' சூழ்கின்றன; தமிழின் தனிமாண்பும், இயற்கை எழிலும், உவமை முத்தும், அறநெறியும், தெரிந்த மொழியும், ஓசைநயமும், முன்னோர் மொழி பொருளும் களிநடம் புரிகின்றன எனலாம். நூற்கடலில் மூழ்குங்கள்; நீங்களும் இன்னும்பல நன்முத்துக்களைக் கொண்டுவந்து குவிக்கலாம்!

''நாவலர் பாரதி நற்றமிழ்ச் சாரதி!
பாவலர் போற்றிடும் பண்புக் குறைபதி!''

தமிழ் வாழ்க !

# மங்கலக் குறிச்சிப் பொங்கல் நிகழ்ச்சி

## வாழ்த்தியல்

பேசும் மனிதருடன் உலகில்
பிறந்து தவழ்ந்துநடந் தோடி,
வீசும் பொதியைவளி[1] ஊர்ந்து,
வினையும் நினைவுகளும் வேண்டும்
தேசும் இயலிசையும் வளரத்
திகழும் தமிழணங்கை, அறிவு
கூசும் அழகிளமை இனிமை
கூர்[2] அறக் கிழத்தி[3]யைத் தொழுவாம். (1)

வாழ்க உலகு, அறமும் ஓங்க,
வறுமை பசிபிணிகள் நீங்க,
ஆழ்க அழிவுதரு தீமை,
அச்சம் கொடுமைவஞ்சம் அழிக,
வீழ்க பருவமழை, என்றும்
விளைக உணவுபொருள் இன்பம்,
சூழ்க தமிழிளொளி எங்கும்,
துன்பம் தொலைக,தொழில் உயர்க. (2)

---

1. வளி – காற்று, பொதியைவளி – தென்றல். 2. கூர் – மிகு. 3. அறிவைத் தலைவனாகவும் மொழிகளை அறிவின் கிழத்தியராகவும் உருவகப்படுத்தி, "அறிவுக்குத் தமிழே முதல் மணந்த காதலறத் தலைவியாவள்; அவளைத் தொழுவாம்," என்பது இப்பாட்டின் கருத்து.

## நூல்

### நிலமும் — பொழுதும்

வானம் வறப்பினுங் குன்றுத
வளங்கெழு தென்பொதியை வாரம்[1],
கானம் கனிகளொடு தேனும்,
கரும்பொடு நெல்வயலும் ஈனும்;
தானம் பெறுதல்அறி யாதார்,
தாளாண்மை வாழ்வுகக்கும் தமிழர்
மானம் கமழ்மலை வளாக
மடிவளர் மங்கலத்தொல் குறிச்சி. (1)

ஏலம் கிராம்பு கருவாயும்[2]
சந்தனமும் எங்குமணம் நிரப்பும்
கோல மலைவளைந்து நிமிர்ந்து[3]
கோளில்[4] அரண மதிலாக,
நீலத் திரைவிசும்பு விரிக்கும்
நேர்கிழக்கில் ஓர்சிறிய திறவை[5]
ஓலம் இடும்அருவி யாறே
ஓயா தொழுகிஅகழ் ஓம்பும்.[6] (2)

பணத்தைச் சிறிதும் மதியார்,
பசியும் பிணியும்அறி யாதார்,
குணத்தை விரும்புகுடி மடவார்
குறையில் நிறையுடையர் குலவக்
கணத்தும் பிரிவரிய காதல்
களிக்கும் கடவுளரும் கருதா

1. வாரம் — மலைச்சாரல். 2. கருவாய் — இலவங்கம். 3. நிமிர்ந்து–நேரே செங்குத்தாக உயர்ந்து. 4. கோளில்— பகைவரால் கொள்ளப்படுதலின்றி. 5. திறவை — திறந்த வெளி. 6. அகழோம்பும்-அகழாகக் காக்கும்.

மணத்தை மகிழ் தமிழர் வாழூர்,
வந்திருக்கும்[1] தைப்பொங்கல் விழவு. (3)

## காட்சியும், காதலும்

பொங்கல் பெருவிழவுக் கிரவுப்
பொழுது முழுதும்உறங் காமல்
எங்கும் புதுக்குபவர் ஆர்ப்பும்
இரையும் பெருமழையி னார்ப்பும்
கங்குல் இருபொழுது[2] கழியக்
கடைசி விடிவதன்முன்[3] வானில்
மங்கல் சிறிதகல, மகளிர்
மழையும் விடக்குளிக்கச் சென்றார். (4)

வெள்ளி முளைத்துவிடி யாமுன்
விழவுத்தை நீராட விரைந்தேன்;
அள்ளத் திரளும்இருட் சோலை
ஆற்றில் இறங்கஅடி வழுக்கி
வெள்ளச் சுழிபறித்த குழியில்
விழுந்து புதுப்பெருக்கின் வேகம்
தள்ள ஒழுகுமெனைச் சுழியில்
தாழாமல் ஏந்திவெள்ளம் நீந்தி. (5)

கையில் மகவெடுக்கும் தாய்போல்
காளை ஒருவனெனைத் தாங்கி
நொய்ய அரைக்கும் நுரைத் திரையால்
நொறுங்கிச் சரிந்தகரை ஏறிக்
கொய்யக் குனிந்துமலர் கொடுக்கும்
குரவு மரத்தடியில் புல்லில்

1. இறுக்கும்—அமரும்; தங்கும், 2. இருபொழுது—மாலையும் யாமமும், 3. கடைசி விடிவதன்மூன்—இரவின் 3-ஆம் பொழுதான வைகறையின் பிற்பகுதி.

பைய நிறுத்திஅயல் படர்ந்து[1]
பரிவு[2] கனியவளைப் பார்த்தான். (6)

உள்ளம் பதைக்கஉடல் நடுங்க
உரைஒன்றும் ஒல்லாமல் நின்றேன்
எள்ளற் கரியஎழில் மார்பன்
இனிய உயிரெனக்கன் றீந்தோன்
கள்ளங் கபடமற்ற முகத்தில்
கருணை பொழியும்விழி "கலக்கம்
கொள்ளல்" எனவுரைக்க நீத்தம்
குமிழி யெழக்குதித்து மறைந்தான். (7)

கிட்டாமல் பேசாமல் காலை
கிழக்கு வெளுக்கும்அந்த வேலை
"தொட்டாண் டெனையெடுத்த தீட்டைத்
தொலைக்கநீர் தோய்வதற்கு விரும்பி
விட்டான்" எனநினைக்க, உடனே
விரைந்து மறைய,என்றன் சிந்தை
எட்டாத ஆழத்தில் அவனை
ஏந்தி உடன்நீந்தக் கண்டேன். (8)

கான்யாற்று வெள்ளத்தை நீந்திக்
கரையில் எனைச்சேர்த்த நம்பி,
நான்நன்றி கூறுத பிழையை
நாணென்று கொள்ளாமல் வெறுத்து,
தான்யாதும் பேசாமல் தருக்கால்
தமியள் எனைஇகழ்ந்து விரைந்து
போன புதுமையினை எண்ணிப்
பொருமி அழுததென துள்ளம். (9)

நீராடும் ஊரார்கள் காண
நேராமல் என்மனைக்குத் திரும்பிப்

1. படர்ந்து—சென்று. 2, பரிவு—அன்பு.

பாராம லேவிரைய, என்பின்
பக்கத்து வீட்டுப்பெண் தொடர்ந்தாள்;
'யாரோடுஞ் சேராமல் தனி நீ
யாண்டுக் குளித்தனை? என்றுரைப்பத்
தேராத[1] நாண்அலைக்கத் திகைத்துத்
தெருவைக் கடந்துமனை புகுந்தேன். (10)

## பொங்கல்விழாப் போட்டிவிளையாட்டு

பொங்கல் விழவயர்ந்து விருந்து
புறந்தந் தங்குண்டாடி யிருந்தோம்
சங்கம் முழங்கஅன்று மாலை
சாத்தன்ஊர்க் கோயிலின்முன் சோலைத்
தங்கி மலைபவர்க்கு வாகை
தருவதைக் காணவிழைந் தேகும்
நங்கையர் கூட்டமொடு நானும்
நடந்தங்கோர் புல்திடரில் அமர்ந்தோம். (11)

எல்லாரும் வந்தமர்ந்த பின்அங்
கிருந்த முதியவருள் முதல்வர்
வில்லாலும் மல்லாலும் நீண்ட
வேலாலும் மிக்கவிறல் காட்டி
வல்லோர்க் குரியமுதல் வரிசை
வாகை விரும்புநரை அழைத்தார்
சில்லோர் எழுந்தவர்தம் பின்னே
சிறுவன் ஒருவன்எழச் சிரித்தார். (12)

பருத்த உடலினர்தம் வயதால்
பல்லாண்டு மூத்தவர்அங் கிளவல்[2]

---

1. தேராத நாண் — காரணம் தெரியப்படாத நாண்; அதாவது தெளிவாகத் தனக்கும் தோன்றாமல் உள்ளத்தில் காதலால் எழுகின்ற நாணம். 2. இளவல் — இளைஞன்.

பெருத்த புயங்களிடைப் படர்ந்து
பிறங்கு மெழில்மார்பன் சிரிப்பான்
ஒருத்தன் எழவும் நமை வெல்ல
ஊக்கும்இவன் யாரென் றுருத்தார்;[1]
விருத்தர் வியந்தனர்;நன் மடவார்
விழியில் அவனைவர வேற்ருர். (13)

முத்தின் ஒளிதவழும் மூரல்,
முறுவல் தவழும்எழில் முகத்தில்,
புத்தப் புதுப்புலியை அடர்க்கப்
புகுந்த இளஞ்சிங்கம் போல்வான்
சித்தத் துரன்திகழும் சிரிப்பில்,
செவ்வேள்[2] இச் செம்மல்இவன்[3] யாரென்
ருெத்த வயதினர்கள் எல்லாம்
உவந்து புகழ்ந்தனர்அப் போது. (14)

பல்லோரும் பார்க்கஅவர் முன்னே
பறம்பு[4] வளைந்துயரத் திறவை
கல்லாரு முட்கம்பி செறியக்
கட்டி அகன்ருழ்ந்த மடுவில்[5]
மல்லாருந் தோள்மறவர் இறங்கி
வரிசை முறையில்அங்கு வகுத்த
தொல்லோர் பலகளரித் துறைகள்
தொடங்கித் திறல்காட்டத் துதைந்தார்[6]. (15)

## தலைவன் கலையால் தலைவிக்குக் கண்ணி சூட்டல்

மல்லார்தோள் வல்லார்கள் அசைக்க
மாட்டாத கல்லைவிளை யாட்டாய்

1. உருத்தார் — சினந்துநோக்கினர். 2. செவ்வேள் – முருகன். 3. செம்மல் - சிறந்தவன்; தலைவன். 4. பறம்பு – மலை. 5. மடுவில் – பள்ளத்தில் 6. துதைத்தார்—நெருங்கினர்.

நில்லா தெடுத்திளவல்[1] எறிந்து
நெடிய தொலையில்நிலம் குழித்தான்
வில்லால்அங் கோரம்பில் தொடுத்து
விரைமுல்லைக் கொத்தொன்றை விடுத்தான்,
எல்லார்க் கிளையவன்என் குழலில்
இறுகச் செறித்துருவ எய்தான். (16)

நல்லார் முகத்தில்அலர்[2] நகைக்கு
நாணி முகிழ்க்குமகிழ் மறைத்தேன்.
அல்லார்[3] அளகநெகிழ்[4] மடவார்
அங்கென்னை தங்கண்ணுற் பழித்து,
வில்லோடு நின்றவனை அன்பு
மிதக்கும் விழிகளினுல் வழுத்த,[5]
இல்லாத செல்வம்எய்தி யிழந்த
ஏழை எனஏங்கி இருந்தேன். (17)

மல்லிட்டு வெல்வாரும், வாளால்
மலைவதிற்[6] றலைமைகொள் வாரும்
சல்லி எருதுபிடிப் பாரும்,
தத்தம் துறையில்திறல் காட்ட,
வல்லார்க்கு வாகைமலர் மாலை
வரிசை யொடுமுதுவர் வழங்க,
எல்லாரும் ஆர்க்குமிடை நெடிய
இரும்புப் பஞ்சர[7] மிழுத் திறுத்தார்.[8] (18)

ஆர்ப்போடு பேச்சரவம் அடங்க
அமைதியுற் றனைவரும் அமர்ந்தார்

---

1. இளவல் – வாலிபன், விரை – விசாரணை. 2. அலர் - மலர்கின்ற; பழிக்கின்ற. 3. அல் ஆர் — இருள் அல்லது கருமை நிரம்பிய. 4. அளகநெகிழ்தல் - "கூழை விரித்தல்" எனுமெய்ப்பாடு; காதலால் குழல் அவிழ்தல். 5 வழுத்த — வாழ்த்த. 6. மலைவதில் — பொருதலில். 7. பஞ்சரம் — விலங்குகளை அடைக்கும் கூடு. 8. இறுத்தார் - நிறுத்தினர்.

பார்ப்போர் மனம்பதறத், திடரில்
பாவையர் பதைக்க,அயில்[1] மறவர்
தேர்ப்பாண்டில் கூடேறிச் சீப்பைத்[2]
திறக்க உறுமிவரி வேங்கை
வேர்ப்பார்முன் முட்கம்பிப் படுகர்[3]
வெளியில் குதித்துலவக் கண்டோம். (19)

வாலை அடித்தகன்ற வாயில்
வளைந்தவள் எயிறுகள் தோன்ற,
மாலைத் தழலெனக்கண் அழல,[4]
வரிப்புலி வெறித்துநின் றுறும,
மேலை அமர்ந்தமுது பெரியார்
மீளி விடலையரை நோக்கக்—
காலை எனைஅளித்த காளை
கதுமென[6] நான்அஞ்ச எழுந்தான். (20)

கல்லாரு முட்கம்பி செறிந்த
காவல் மடுவில்[5] நடு நின்று
பல்லார் பயந்தொருவப் புலிதான்
பாயப் பதுங்குமுனம் பாய்ந்தான்
பொல்லாப் புழைவாயில் வேலைப்
புதைத்துப் புறம்உருவத் தரையில்
மல்லாந் தலறஅதன் தலையை
மண்ணோடு தைத்தூன்றி மலைந்தான்.[7] (21)

எல்லாருங் கைகொட்டி ஆர்த்தார்
எள்ளும் சிறியசெயல் இழைத்த
கல்லாத கள்வன்என வெள்கிக்
காளை முகம்கவிழ்ந்து நின்றான்

1. அயில் – வேல். 2. சீப்பு – உருவு கதவு; செருகி உருவும் அடைப்பு. 3. படுகர் – பரந்த பள்ள நிலம்; 4. அழல – எரிய. 5. மடு – பரந்த பள்ளம். 6. கதுமென - விரைவாக. 7. மலைந்தான் — எதிர்த்துப் பொருதடர்த்தான்.

சொல்லாத காதல்களி கூரத்
தோன்றுத வாய்முறுவல் ஊர
நில்லாதென் நெஞ்சில்நிறை நெகிழ
நிலையாத மால்[1] நீத்தத்[2] தாழ்ந்தேன், (22)

மாலை மயங்கமதிப் பிறைமேல்
வானீல வெள்ளத்தில் நீந்திப்
பாலைப் பழித்தொளிர்வெண் பளிங்குப்
படகாய் முகில்கிழிக்கப் பார்த்தேன்;
ஆலை[3] அரவமொடு புள்ளின்
ஆர்ப்பும் அடங்கஇருள் அடரும்
சாலை வழித்திரும்பி விரைந்தூர்ச்
சதுக்கம்[4] கடந்துமனை புகுந்தேன். (23)

### மனையில் தலைவியை மாமி பழித்தல்

வீட்டிற் புகுந்தளனை மாமி
வினவும் கிழவியர்கள் சூழ
"நாட்டுப் புறத்தொருவன் சிறுவன்,
நம்மூர் மறவர்பொரத்[5] துணியாக்
காட்டில் பிடித்தபுதுப் புலிவாய்க்
கைவேல் புதைத்ததனைத் தரையில்
மாட்டி வதைத்தகதை புலையா[6]?
வல்லார் நம்மூரவருள் இலையா? (24)

"வீரன்என் றெல்லோரும் புகழ
விளங்கும்உன் அத்தான்அங் கிருந்தூர்ப்
பேரைப் பிறன்பறிக்க விட்டுப்
பித்துப் பிடித்துறங்கி னுனு?

---

1. மால் – மையல். 2. நீத்தம் – வெள்ளம்; அதாவது பெருக்கு. 3. ஆலை – கரும்பு எள் முதலிய ஆட்டும் கருவி. 4. சதுக்கம் - நாற்சந்தி. 5. பொர — மலைய; போரிட. 6. புலை - பொய்.

சூரன் புதியன்எனத் துணிந்தோ
சூட்டும் அவன்மலரைப் புனைந்தாய்?
ஊரார் சிரிக்கவகை நினைந்தோ
உவர்த்த[1] பழிகுடிக்கு வனைந்தாய்!'' (25)

**மாமியைத் தலைவியின் சித்தி மறுத்துரைத்தல்**

என்றென் செவிசுடுஞ்சொல் மாமி
இயம்ப, இடிகேட்ட அரவென்
ரென்றும் விளங்காமல் உளையும்[2]
உள்ளம் உடையவிம்மி அழுதேன்
நின்ற கிழவியருள் ஒருத்தி
நெருங்கித்தன் னெஞ்சிலெனைப் பொருத்தி,
''இன்று புலியடர்த்த இளவல்
இனத்தைத் திறலை[3] எவர் இகழ்வோர்? (26)

மன்ற முதுவர்தமுவ முதல்வர்
மார்போ டணைத்தவனை வாழ்த்தித்
தொன்று தொடர்புபல சொல்லித்
தோழமை கொண்டாடக் கண்டோம்
வென்றி விறல்விளங்க விடலை
வில்லிற் கணைவிடுத்து முல்லை
சென்றிச் சிறுமிகுழற் செருகச்
செய்த திறலைஎவர் வியவார்? (27)

''வள்ளி தனைமுருகன் விரும்ப
வானத் தரசன்மகள் வெதும்பிக்
'கள்ளி' யெனப்பழித்த கதைபோல்,
காளை கணைதன்னைக் கழிக்கத்
துள்ளித் துடிக்கும்ஒரு சிறுக்கி
தூயமனத் திவளைத் தூற்றில்,

---

1. உவர்த்த — வெறுக்கும், 2. உளையும் – வருந்தும்.
3. திறல் – ஆற்றல்.

எள்ளி இகழஇவள் ஆளோ?''
என்று கழறிஎன் கண் துடைத்தாள். (28)

அவ்வேளை யில்வெளியில் ஒளியும்
ஆர்க்கு முரசொலியும் எங்கும்
செவ்வே தெருநிரப்ப, மக்கள்
திரண்டு பரபரக்கும் ஆர்ப்பின்
கவ்வை[1] செவிநிரப்ப அவ்வை[2]
கடிதில்முன் மாடம்எனைச் சேர்த்தாள்
செவ்வேள்என் நெஞ்சமர்ந்த செம்மல்
தெருவிற் பவனிவரக் கண்டேன். (29)

**தலைவன் உலாவரத் தலைவி மலர் பெய்தல்**

வீதி நிறைந்திளைஞர் ஆர்க்க,
மேடை மகளிர்மலர் போர்க்கச்
சோதி நிறைந்தமுகத் தறிவு
சுடரும் விழிகளில்ஓர் துயரம்
ஓதும் பனிப்படலம்[3] படர
ஊரும்பால் வெள்ளை நிறப் பரியின்
மீது முறுவலுடன் செம்மல்
வீறு மிளிரவலம் வந்தான். (30)

அருகு வரவும்அவன் அம்பென்
அளகம் செருகுமலர்க் கொத்தை
விரகு நினையாதென் கைகள்
விரைந்தங் கெடுத்தவன்மேல் வீசப்
பெருகும் உவகையொடு நின்றேன்
பின்வந்தம் மாமி[4]என்கை பிடித்துக்
கருகு முகம்கனலக் கழறி,
''காம வெறிபிடித்த கள்ளி! (31)

---

1. கவ்வை—ஒலி. 2. அவ்வை—முதியோள் 3. பனிப்-படலம்—கண்ணில் படர்ந்து ஒளி மறைக்கும் நொய்ய நீர்த் திரை. 4. அம்மாமி—அம்மான் மனைவி.

### மாமிவசவு

"தெருவில் திரிபவர்கள் சிரிக்கத்
தெரியாச் சிறுவனுக்குன் தலைப்பூ
உருவி உதிர்த்துவந்து, நாணும்
ஒழித்து நகைப்பின்,அவன் உன்னை
மருவி மகிழ்வன்என நினைந்தோ
மலரும் புனைந்தனை" என் றிகழ்ந்தாள்
வெருவி[1] அலமருமுன் முதியோள்
வெம்பித் தெழித்து[2] மறுத் துரைப்பாள். (32)

"விடலை கணைகுழலிற் செருகி
விட்ட மலர்க்கிவளை வைதாய்;
தொடலைக்[3] குறுந்தொடி[4] பின் அதைமுன்
தொடுத்த கணையினன்முன் எறிந்தால்
நடலை[5] உடனதற்கும் நலிவாய்;
நாவில் நரம்புமிலை உனக்கு
கடலை நிகர்த்தெவரு மார்த்துக்
களிக்கும் இடையுனக்குக் கடுப்பேன்?" (33)

என்ற முதியவளை மாமி,
"எங்கே இதுவரையும் இருந்தாய்?
சென்றஉன் அண்ணனொடு நீயும்
செத்தீர்கள் என்றுதிதி கொடுத்தோம்;
மன்றிற் புதுவன்மலர் சூட
மால்கொண் டதைமகிழ்உன் மகளும்
நின்ற பழிகுடிக்குத் தந்தாள்;
நீயும் அதைப்புகழ வந்தாய். (34)

என்றோர் இருவரையுந் தின்றாள்,
இருந்து பழிவளர்க்க நின்றாள்;

1. வெருவல் - அஞ்சுதல். 2. தெழித்து — சினந்து. 3. தொடலை-மாலை. 4. குறுந்தொடி-சிறிய வளை [அணிந்தவள்.] 5. நடலை-பொய்; வஞ்சம்.

சான்றோள்இப் பெண்மணியின் தாய்என்
தமையர் தனை இகழ லானாள்;
ஆன்றோர் குடிப்பழியை அஞ்சி
அண்ணர்உன் அக்காளை அகற்றத்
தோன்று துயிர்துறந்து மானம்
தொலையா மலேநிறுத்தி இருந்தார். (35)

கைமை[1] நிலையடைந்துன் தமக்கை
கட்டுக் கடங்காமல் நடந்தாள்
பைமை[2] நிலைக்குரிய விதவை
பருவ மடந்தைஎனப் புனைந்து
வையப் பழிஇகழ்ந்து வாழ்ந்து
மாணா முடிவடைய, நீஎன்
கையில் இவளைவிடுத் தூர்மேல்
காணும லேஒழிந்து போனாய். (36)

"நானிந்த நாதியற்ற[3] நாயை
நட்போடு சீராட்டி வளர்த்தேன்.
தானுந்தன் தாய்மாரைப் போலே
தலைதடு மாறிநன்றி இன்றி
மானம் அழியஉயிர் வாழ
மனது துணிவள்,அறம் வீழ;
வானும்[4] வறக்கும்இனி நாட்டில்,
வாழ்வேது மானமுடை யார்க்கு? (37)

"வானாட்டு மாட்சிசொலி, மண்ணில்
வாழ்வுரிமை பெண்களுக்கு மறுக்கும்
தாநாட்டு நூல்[5]கள்என இகழ்ந்து
தக்கோர் அரசுமொழி புகழ்ந்து

---

1. கைமை—கைம்பெண்(விதவை) 2. பைமை நிலை—தவப் பெண் நிலை. 3. நாதிஅற்ற—ஞாதி (உறவினர்) இல்லாத. 4. வானும்—மேகமும். 5. தாநாட்டு நூல்—தாம்+நாட்டு+நூல். "நா" முன் "ம"கரம் கெட்டது.

மாநாட்டு மேடைகளிற் பேச,
மாண்பு பெறநினைத்து மயங்கி
மேனாட்டுக் கல்விஉயர் வென்று
விரும்பி இவள்படிக்க விட்டேன், (38)

"சீனத்துப் பெண்ணாகி, யாரும்
செய்யாப் புதுமைகளில் திளைப்பாள்;
வானத் துருமாறும் முகில்போல்
மாறிக் குழல்வேய்ந்து களிப்பாள்;
கூனக் குறைஉடைகள் தரிப்பாள்;
கூட்டத்து நாணாமல் சிரிப்பாள்;
ஈனத்[1] துறையில்இவள் அளவுக்
கிறங்கு பவரில்லை" என்றிரைந்தாள். (39)

## மாமியைச் சித்தி வசை கூறல்

காது கசக்கும்அவள் வசவைக்
காயாமல் வாய்சிரித்து முதியோள்,
போதும் உனதுபுகழ் முழுதும்
பொய்யா துரைப்பன்எனப் புகன்றாள்
"ஏதும் அறியஇச் சிறுமி
இறவா திருப்பதுன தருளா?
தீதிவளைச் சேராமல் தாதை
செய்தமரணமுறித்[2] தெருளா[3]? (40)

காதல் மகள்தனக்குப் பின்உன்
கையில் மரிப்பளெனக் கருதிச்
சாதல் எதிர்பார்த்துன் அண்ணர்
தாம்ஈட்டி வைத்தபெரும் பொருளை

---

1. ஈனத்துறை—இழிவான நெறி. 2. மரணமுறி—செத்த பின் சொத்தின் வினியோகம் விதிக்கும் பத்திரம். அதை "ஒயில்" [Will] என்பது வழக்கு. 3. தெருள்—விளக்கம்—தெளிவு.

வாதில்[1] முறிவகுத்த முறையால்,
வயது நிறைந்திவள்தன் வேட்கை
மீதில் மணப்பின்இவட் காகும்;
வீயில் மருகனுக்குப் போகும். (41)

''இந்த முறிஇருப்ப தாலே
இவளை வதைத்திலை, நின் மகனும்
மந்த மதிக்கிவளை ஒருநாள்
மணக்க நினைத்தனை;இவ் இளையோள்
சொந்த வயதுநிறை நாளும்,
தூயள் உளம்விரும்பும் வேள்தான்
வந்து மணங்கோலும் நாளும்
வாய்த்ததித் தைப்பொங்கல் விழவில்[2]. (42)

''மழவு[3] கெழுமி[4]மலர் பருவ
மங்கை உனை உனது பெற்றார்
விழையும் விலைகொடுத்தென் தமையர்
வேட்க விரைந்தன்று விற்றார்
கிழவர் கொழுநர்பண மணந்து,
கேளென் றினையவரை நெருங்கத்—
தழுவ மறுத்தபுரை[5] மறவாய்,
தமையர் மனத்துறவு சுருங்க. (43)

''காதைக் கடித்துனது கணவர்
கடுக்கப் பலதொடுத்துக் கெடுத்தாய்
சூதை அறியாதென் தமையர்
தூயோர்தன் தம்பியரைக் கடுத்தார்
வாதை பொறுக்காமல் அவர்இவ்
வாழ்வை வெறுத்தகல விடுத்தாய்

1. வாதில் — விவாதம் இல்லாதபடி. 2, விழவு—விழா.
3. மழவு—இளமை. 4. கெழுமல்—மிகுதல்; நிறைத்தல்.
5. புரை—குற்றம்; பெருமையுமாம்.

ஏதை எடுத்துரைப்ப தினிஉன்
எண்ணற்ற கைதவந்தின்[1] பெருமை? (44)

"தொழுவில் உழவன்உனைத் தழுவத்
தோட்டத்தில் நின்றஇவன் அன்னை
வழுவில் உளத்தள் அதைக் கண்டும்
மனதில் மறைத்தடக்கி மறந்தாள்
விழும[2] மிகுந்துமனம் வெதும்ப
வீணே பலவழிகள் சுமத்திக்
கழுவ முடியாஉன் காமக்
கறையை மறைக்களணிக் குமைத்தாய். (45)

"அழகன் உழவன்உன தன்பன்
அப்பாவி இப்பெண்வனை திருடிப்
பழகிய வண்ணாத்திக் கணிந்தான்;
பறித்ததை வண்ணான்தன் சூதுக்
கழகத்தில் வைத்தாடக்-காவல்
கருப்பன் பிடித்தடித்துக் குருதி
ஒழுகக் கொடிறுடைக்க,[3] உழவன்
உன்காதற் காதகக்கட் டவிழ்த்தான். (46)

"உங்கள் குலமுதல்வர், இந்த
ஊருக்கு மேமுதல்வ ரோடு
தங்கு மிளவல்பிற னல்லன்;
தாயத்திப் பண்ணைஅவன் உடைமை;
பங்கில்லை என்றதனை முழுதும்
பறிக்க நினைத்துனது தந்தை
முங்கு கடனுக்[4]கது விலைபோல்
முறியும் எழுதுவித்து முடித்தாய். (47)

---

1. கைதவம்—வஞ்சனை; பொய். 2. விழுமம்—துன்பம்; இடும்பை. 3. கொடிறு—கதுப்பு; கன்னம். 4. முங்கு கடன்—முழுக வைக்கும் கடன். [இ]ருணம்.]

''தந்தை இறக்க, அவர் மூத்தாள்
தனயர் இவள்தாதைக் கிறங்கும்
பந்தம் அறுக்கநினைத் தவரைப்
பகட்டி மருந்தருத்திப் படுத்தாய்
அந்த முறையில்அவை இன்றிவ்
அணங்கின் தனியுடைமை யாகும்
எந்த முறையிலும்இங் கினிநீ
இருக்க வழியில்லை, ஒழிவாய். (48)

''மடியில் கனம்இல்லை; அதனால்
மனதில் பயமும்இலை எனக்கு
கொடிய வசைமொழிகள் கூறிக்
குற்றம் இலாஇவளைக் குமைப்பை;[1]
இடிஉன் தலையில்விழும் காலம்
இனிமேல் தொலையில்இலை; நாளை
விடிய முடியும்உன தாட்சி;
விழுந்து கழிந்ததுங்கள் மாட்சி. (49)

இடிந்து விழுந்ததுங்கள் சூழ்ச்சி;
இன்றே தொடங்கிற்றுங்கள் வீழ்ச்சி;
விடிந்து விழிப்பவர்தங் கனவாய்
வீணே கழிந்ததுங்கள் நினைவு;
முடிந்து சிறையில்இருள் தேடி
முடங்கி ஒளிந்துமுக மூடி
மடிந்து நெடியதொரு தூக்கு
மரத்தில் அசையும்உங்கள் யாக்கை. (50)

''நில்லோம் இனிஎதையும் எண்ணி;
நின்னை அழைத்துவரப் பண்ணை
வில்லார் எழிற்பண்டி பூட்டி
மேலாளுங் கூட்டிஎனை உய்த்தார்;

---

1. குமைப்பை—அழிப்பாய்; துன்புறுத்துவாய். 2. பந்தம் - முறைமை—கட்டு.

செல்வோம் உன்பாட்டரோடின் றிரவைச்
செலவிட் டிப்பழிகாரி கரவை[1]
வெல்வோம், நினதுயிரைக் காத்தோன்
விரும்பி வரவேற்பன் உன்னை. (51)

"என்னைநின் அன்னையுடன் பிறந்த
ஏமாறித்[2] தங்கையென்றுன் மாமி
சொன்னாள்ஓர் உண்மைஅவள் வாழ்வில்
சோரும் துயர்துடைத்துன் துணையாய்
மன்னும் மனைமாண்பொ டின்பம்
வழங்கஉன் மாமன்மகன் வந்தான்;
கன்னிஉன் காலில்அவள் காதல்
காணிக்கை வைக்களனை உய்த்தான். (52)

"நேரில் குறைஇரக்க நெருங்கான்,
நின்மாமி தன்மகனை டெங்கும்
ஊரில் அலர்[3]பரப்பி உன்னை
உள்ளம் வெதுப்புவள்என் றஞ்சி
பாரில் தனக்குநிகர் இல்லாப்
பண்பன்நின் நண்பருள்வை யென்று
தேரில்தன் வாழ்வொடுயிர் தரிப்பன்;
தேற்றாய் எனில்உடனே மரிப்பன். (53)

## வந்த மருத்துவப்பெண் குத்துப்பட்ட தலைவன் சித்தநிலை கூறல்

"போவோம் வருவை" என்றென் சிற்றாய்[4]
புகழும் பொழுதொருத்தி புகுந்தங்(கு)
ஆ-ஒ- எனஅரற்ற, அத்தை
ஆர்அங் கடித்ததுனை? என்னத்

1. கரவை—வஞ்சத்தை. 2. ஏமாறி—எளிதில் ஏமாறுபவள். "ஏமாளி" என்பது வழக்கு. 3. அலர்—பழி. 4. சிற்றாய்—சித்தி.

தேவோ எனத்திகைக்கும் அழகன்[1]
 தெருவிற் பவனி[2] முடித் திறங்க,
'சாவாய்' எனஉன்மகன் குத்தத்
 தாங்கி எடுத்திளைஞர் சென்றார். (54)

குத்தின கத்திபறித் தவனைக்
 குடுமிபிடித் துக்குட்டைக் கருப்பன்
முத்திரு ளப்பபிள்ளை யோடு
 முணங்க[3] அடித்துதைத்த போது,
நத்தி விலக்குபவர் இன்றி,
 நாயை அடிப்பதுபோல் பலரும்
மொத்திக்[4] குமைக்க[5] உரன் முரிந்து
 மூர்ச்சித்து வீழ்ந்தனன்என் றுரைத்தாள். (55)

வா, வா, என்முதியள் இறங்க,
 வந்த மடந்தைஎனை விரைந்து
போவீர் நம் புங்கவர்உம் பாட்டர்
 புனிதர்பொன் மாளிகையிற் புதியர்
சாவாமற் றப்பினது நீர்செய்
 நவமென்று சாற்றுவர்அச் சான்றோர்
நாவால் இளைஞரும்நும் நாமம்
 நவின்று தயங்க, இவண் வந்தேன்.' (56)

என்றாள் உரைஎனது செவியில்
 இனிமை உடன்எரியை நிரப்ப,[6]
நின்றாள்என் மாமி நிலைஎதுவும்
 நினையாமல், இவ்விரண்டு படிகள்

---

1. தேவோ எனத் திகைக்கும் அழகன்—காண்போர் காமதேவனோ என்று மயங்கும் வனப்புடையவன். 2. பவனி—உலா. 3. முணங்க — அடங்க. 4. மொத்தி—அடித்து. 5. குமைக்க—துன்புறுத்த 6. நிரப்ப—தலைவன் மயக்கத்திலும் தன் பெயரைச்சொல்லுகிறான் என்பது இனிமையையும், அவன் குத்தப்பட்டு மயங்கினான் என்பது நெருப்புப்போன்ற எரியையும் நிரப்ப.

குன்றாத ஆர்வமுடன் குதித்துக்
குறியொன்றும் இல்லாதெல் லோர்க்கும்
முன்தாவி வாயிலின்முன் நின்ற
மூடுதிரைப் பண்டியினுள் நுழைந்தேன். (57)

## தலைவனைக் காணத் தலைவி பாட்டர்வீட்டுக்கு வருதல்

சிற்றன்னை வந்தவளொ டென்பின்
திரையைத் திறந்தேறிப் புகுந்தாள்
மற்றங்கு வந்தபண்ணை மேலாள்
மாடோட்டி பின்இருப்புப் பெட்டி
உற்றங் கிருந்தவுடன், எருதும்
ஒட்டா துணர்ந்துவிரைந் தோடி
முற்ற முதல்வாயில்[1] முன்பு
மொய்ப்போர் விலகவந்து நிற்க; (58)

யாயும்[2] அயல்வளும் முன்னும்
யானவர்தம் பின்னும்விரைந் திறங்கி,
சாயும் சனத்திரள்அன் றங்குச்
சந்தடி இன்றிவழி விடவும்,
தோயும்பூத் தோரணங்கள் தொங்கத்
துலங்குந் தலைவாயிற் படியில்
ஆயு[3] மடந்தையர்கள் விலக,
அகத்துட் புகுந்துநடந் தோமால். (59)

கூடங் கடந்தகன்றங் குயர்ந்த
கோலா கலச்[4]சதுர அறையுள்
ஆட அசையமுடி யாமல்
ஆடவர்கள் ஆங்காங்கு நிற்க,
மடா மிசைமகளிர் வாய்ச்சொல்
மறந்து மகிழ்துறந்தங் கிருந்தார்

---

1. முற்றமுதல்வாயில்-முற்றத்தில் தலைவாசல். 2. யாயும்-சின்ன அன்னையும், சித்தியும் 3. ஆயும் — மொய்க்கும். 4. கோலாகலம்—கொண்டாட்டத்திற் குரிய.

ஓட முடியாதோர் சிறுமி
உற்றெனது கைபற்றிச் சிரித்தாள். (60)

பின்னே அவள்அன்னை என்னைப்
பேசாமல் பின்தொடர அழைத்து,
''உன்னை எதிர்பார்த்துன் பாட்டர்
ஓயா துசாவி[1]உளை கின்ருர்;[2]
தன்னேர்இல் செம்மல்[3]உயிர் தரிக்க
தவிக்கும் இடைநுமது பெயரைக்
கொன்னே உருவேற்றும் வாயால்
கோத்ததன் அங்கைகளை முத்தும். (61)

''புகுவைஇத் தென்புறத்துப் பள்ளி;
புனிதர்நம் பாட்டரொடும் இருவர்
மிகுதிறல் மருத்துவர் இருந்து
விடலை[4] தன்இடது விலாப்புண்
உகுகுடல் உள்அடைத்துத் தைத்தங்
குடலைச் சுடுஞ்சுரத்தை மடக்கத்
தகுபல சிகிச்சைகள் புரிவர்,
தாழாமல் சென்றுதவி தருவாய்''. (62)

''வாராய்இப் பக்கஅறைக் கக்காள்!
வனிதை இவளுனது மகட்குச்
சோராமல் நின்றுதுணை புரிவாள்;
தூங்காமல் நாம்இருந்திங் கிவர்கள்
சோராமல் வேண்டுவன கொடுப்போம்;
கோடை இடிக்கொடுமை நம்மைச்
சேராமல் நம்முதியர் பிழைக்கச்
செம்மற் குயிர்அளிப்பர் கடவுள். (63)

---

1. உசாவி — வினவி; விசாரித்து; 2. உளைகின்ருர் — வேதனைப்படுகிருர். 3. நேரில் செம்மல் — ஒப்பில்லாத தலைவன். 4. விடலை—காளைப்பருவத்தான்; மணவாளனுமாம்.

''நல்லார்க்(கு) அறம்துணைய தாமேல்,
நாலைந்து நாழிகைக்குள் நம்பி
பொல்லாச் சுரம்குறைந்து, போதம்
பொலியப்புண் நோவொழியக் காண்போம்;
எல்லாம் இறைவனருள், நம்மால்
இயல்வதைச் செய்வதுநம் கடமை;
நில்லாமல் நீங்கள் இனி அறையுள்
நேரே நுழைதிர்''என மறைத்தாள். (64)

### தலைவனை உயிர்ப்பித்துதவத் தலைவியைப் பாட்டர் வேண்டல்

பள்ளிக் கதவைமெல்லத் திறந்தேன்;
பாட்டர் விரைந்துவெளிப் போந்தார்;
துள்ளித் தழுவிவிழி பொசிநீர்த்
துளியைத் துடைத்தயலோர் தவிசைத்
தள்ளி, இருத்தி,அரு கிருந்து,
தயங்கி உரைப்பர்தழு தழுத்து
'வெள்ளி எழுந்ததினி விடியும்;
விடலை உயிர்பிழைக்க முடியும். (65)

'ஆன்ற எமதுகுடி விளக்கை
அவியவி டாதுநெய்வார்த் தருள்வை
போன்று புகுந்தனை;இன் றுனக்குப்
பூவை அணிந்தவன்உன் அம்மான்
ஈன்ற மகள்,எனது பேரன்
இறவா துயிர்உதவ அகத்தே
தோன்றி உனதமுத விரலால்
தொட்டால் துடிக்கும்உயிர் துளிர்க்கும். (66)

வல்ல மருந்துனது விரலும்
வயங்கும்நின் கண்அருளும் என்று
நல்ல மருத்துவரும் நவில்வர்;
நாவால் அவன்உயிரும் உரைக்கும்

கொல்ல நினைப்பவர்தம் கொடிய
குணமுங் கருத்தும்உன தன்னை
சொல்ல உணர்ந்திருப்பை, அருள்வாய்,
தொழுதிங் கிரப்பன்உனை நானும்.[1] (67)

நாணிச் சுணங்கில்இவன் இறப்பான்,
நாங்கள்எல் லோரும்உயிர் துறப்போம்;
பேணி அருளுவதுன் பெருமை,
பெண்மைப் பிறப்புரிமை அருளே
காணி[2] விரும்பிக்குடி கேடர்
கானைஎன் கானைமுனையின்[3] உயிரை
வீணில் அழிக்கமிக விழைவார்;
விளக்கை வளர்த்திருனை விலக்காய்'. (68)

அருளும் அறனும்இரு விழியாய்
அறிவு முதிர்ந்தொளிரு முகத்தில்
மருளும் துயருமலைந் திருள,
மார்பைக்கண் நீர்நனைக்க மறுகி
வெருளு மதலைஎன அழுது
விம்மிஎன் மோவாயை வருடி[4]
"தெருள்உன் உரைதருவை, எங்கள்
தெய்வம்நீ அன்றிஇலை" என்றார். (69)

## இயல்வதை முயலத் தலைவி உடன்படல்

பொங்கி எழும்துயரும், பாட்டர்
புகன்ற அவலஉரைத் துயரும்,

---

1. உடல் அயர்வை அவள் விரலும், உள மயர்வை அவள் கண்ணருளும் முறையே தீர்க்கவல்ல மருந்தாகும் என்பது மருத்துவர் கருத்து; உணர்விழந்து மயங்கிய இளைஞன் புலப்பமும் அதைக்குறிக்கும்; அவ்விரண்டையும் உதவி, அவனை உயிர்ப்பித்தருளுமாறு யானும் இரக்கின்றேன், என்று பாட்டர் அவளை வேண்டினர். 2. காணி - நிலம். 3. கான் முளை - வழித்தோன்றல்; வாரிசு. 4. வருடி - தடவி.

தங்கி நிலையாதென் நாணின்
தடையை உடைத்தெறிய எழுந்தேன்,
எங்கும் இருந்தவரை மதியேன்,
எம்மான் பெரியர்அடி வீழ்ந்தேன்
மங்கும் உணர்வொடந்த முதியர்
மடியில் முகம்புதைத்தங் கழுதேன். (70)

'நரியை அரியிரப்ப துண்டோ?
நாயேற்கும் ஆணைஅற மன்றோ?
சரியை கிரியைதவ மூன்றும்
தம்மில்இச் செம்மல்உயிர் தரிக்கப்
புரியும் துணையெனில்,எம் இறையைப்
போற்றித் தவங்கிடப்பன்; அண்ணல்
அரிய உயிர்பிரிவ தாயின்
அதற்குமுன் அவியும்என் ஆவி. (71)

'காலை எனதுயிரைக் காத்த
காளைஎன் தீயவுடல் தீட்டால்
மாலை உயிர்துடித்து வருந்த,
வாளா அமைந்திருக்க மாட்டேன்
வேலை வளைந்தபுவி மீது
'வெல்லும் அறம்'எனுஞ்சொல் மெய்யேல்
பாலை[1]என் பாற்படுத்தி, ஏந்தல்
பல்லாண்டு வாழவரம் பெறுவேன். (72)

'பெற்றார் இருவரையும் இழந்தேன்,
பிழை யொடுபழியும் உழந்தேன்
உற்றார் எவரும்இலன், இவர்என்
ஊழை எதிர்த்தெனக்கென் உயிரை
மற்றார் அறியாமல் காலை
வழங்கி மறைந்ததற்கிம் மாலை

---

1. பாலை–ஊழை.

செற்ருங்கி[1]ச் செம்மல்உயிர் உண்ணத்
தினவும்[2] விதிசெகுக்க[3] முயல்வேன். (73)

'மதனர் உடல் செகுத்த சிவனை
மறக்க அவருயிரைச் செறுக்கும்[4]
அதமர் உறவினள்என் றென்னை
ஆறும் விழுங்கவெறுத் திடஇன்
றுதவிக் கரைசேர்த்த உம்பல்[5]
உயிரைப் புரக்கப்பலி யாய்என்
சதம்இல்[6] உயிர்கொடுக்கத் தாழேன்,
தாளைப் பிடித்தெமனைத் தடுப்பேன்' (74)

என்ற எனைவாரி எடுத்தங்
கிறுகத் தழுவிக்கையைப் பிடித்துச்
சென்றந்தப் பள்ளியறைக் கதவைத்
திறக்க, மருத்துவரும் எழுந்தார்.
"நன்று தரும்உனது வருகை,
நாங்கள்இனி இருக்க வேண்டா;
இன்றிங் கிருந்து மருந்தாய்இவ்
ஏந்தல் உயிர்தழைய இழைப்பாய். (75)

### அருகிருந்து தலைவனை அருமை செய்து உயிர்ப்பிக்கத் தலைவியை மருத்தவர் வேண்டல்

"கரும்பு மொழியொ டெழில் அறிவும்
கரைஇல் பொறையும் மிகஉடையாய்,
விரும்பி இவ்வேள்உனது பெயரை
விளிக்கும் பொழுதுமிகும் அன்பு
தரும்பல் இனியவுரை சாற்றித்
தடவில், தளிர்க்கும் இவர் உயிரும்;

1. செற்ருங்கு—சினந்ததுபோல. 2. தினவும்—சொறி எடுக்கும், பரபரக்கும். 3. செகுக்க—அழிக்க. 4. செறுக்கும்-கொல்லும் 5. உம்பல்-களிறு; [ஆண்யானைபோல்பவன்]. 6. சதம் இல்—நிலை இல்லாத.

அரும்பி மலரும் முகமுறுவல்,
அசைய விடாமல்அரு கமர்வாய். (76)

"வெளியில் இருப்பம், எமக் கிவளை
விடலை விழித்துளத்தில் உணர்வு
தெளியில் தெரிக்க[1] உடன் அனுப்பாய்,
தேறி விழிப்பர்இனி விரைவில்;
அளியும் நிரம்பிஅறி வுடையாய்,
அன்பை இனிமறைக்க வேண்டா;
களியில் தழையும்இவர் உயிர்உன்
கருணை மழைகுறையின் முளியும்"[2] (77)

என்று மருத்துவப்பெண் உடனே
என்னை நிறுத்திஅவர் மூவர்
சென்று வெளியேறத், திகைத்துச்
செய்வ தறியாமல் நின்றேன்.
துன்றி[3] அருகிருந்திச் செவ்வேள்
தூய உடல்தடவி அயர்வை
வென்று துயிலுணர்த்த முயல்வோம்,
விரைந்து தொடங்குவம்என் றுரைத்தாள். (78)

## தெளியும் குறிகண்டு மருத்துவப் பெண் விலகல்

நானும் மருத்துவப்பெண் தானும்
நம்பிக் கிருபுறமும் மஞ்சத்
தானக் கடையில்எதிர் எதிரே
தங்கி அவர்முகத்தை நோக்கி,
வானத் துளிவிரும்பும் புள்போல்,
வருந்தி அவர்கரத்தை வருட,[3]
மோன நிலைகலைந்து வாயில்
முறுவல் முகிழ்ப்பதனைக் கண்டோம். (79)

1. தெரிக்க – தெரிவிக்க. 2. முளியும் – உலரும்; காயும்; வறளும். துன்றி - நெருங்கி. 3. வருட—தடவ.

'அம்மா அவர்க்குணர்வு பிறந்த(து)
அருமை உரைஅவர்தம் செவியில்
நும்மால் உரைப்பதினி மூர்ச்சை
நோய்க்கு மருந்தெனமுன் கேட்டீர்;
விம்மீர், விழிப்பவர்கண் முன்னே
விழும்இ லாஉவகை காட்டீர்;
சும்மா நான் இங்கினிமேல் இருத்தல்
தூயோர் தெளிவதற்குத் தடையாம். (80)

'தூரத்துச் சாளரத்தின்[1] முன்னே
தொங்கு திரைமறைவில் கட்டில்
ஓரத் திருப்பன்துணை வேண்டில்
உடனே வருவன் என ஒதுங்கி,
'ஈரத் தினியவுரை அமுதம்
ஈந்து மகிழ்விளைத்திவ் வேந்தல்
வாரத் தினியஉயிர்த் துணையாய்
வாழ்வீர்', எனவாழ்த்தி மறைந்தாள். (81)

## தலைவன் தெளியத் தொடங்கல்

கண்கள் திறந்துமுதல் எதையும்
காணும லேபரவை யாடி,
பண்கள் மிசைவிசும்பில் அறுகாற்
பறவை திரிவதென மிதந்து,
பெண்கண் மண அறையில் சுருங்கிப்
பிறகு புலவியினில் விரிந்து
கொண்கன்[2] முகமலரில் ஆயும்
குறும்பு நிகரஅமர்த் தனவே. (82)

சொல்லும் தொடங்கி இடைமுறிவும்
தொடுத்த தொடர்மொழியும் ஆக
மெல்ல விரைவுகொள, யானும்
வெருவி மகிழ்வுமிக லானேன்.

---

1. சாளரம்—ஜன்னல். 2. கொண்கன் - காதலன்; கணவன்,

கல்லுங் கரையஉளக் கிடையைக்
காட்டும் உரைகள்உரு வெளியாய்[1]
அல்லல், அறவுணர்வின் உறைவை
அடுக்கி விளக்கிவெளி வந்த. (83)

### தெருளாத் தலைவனின் உருவெளிப் பேச்சு

"நீரார்? எனைநகைக்க நினைத்தென்
நெஞ்சில் நிலைப்பவள்தன் தெய்வ
ஏரார் உருவெடுத்து வந்தீர்?
ஏமாறி நான்தொடுவ னென்றோ?
ஓரா துமைஅகற்றத் துணியேன்;
ஒருகால்என் உள்ளம்விட்டென் உயிரைப்
பேரா திருத்தஅருள் பெருகிப்
பெயர்ந்த பெருமாட்டி தானோ? (84)

"நோற்ற குரவர்தம தன்பால்
நோதல் அறியாமல் வளர்ந்தேன்;
நேற்றுவரை மகளிர் காதல்
நினைத்தும் அறியாஎன் நெஞ்சில்
போற்றும் அறிவுநிறை அழகு
பொருவில் அணங்கொருத்தி புகுந்தாள்;
ஏற்று மணக்கமனம் துணியாள்,
எனினும் அவள்முகத்தை மறவேன். (85)

"முன்னைத் தவக்குறையின் ஈண்டு
முறையே மனைக்கிழமை பூண்டு
என்னைக் கணவன்எனக் கொள்ளாள்,
எனினும் எனதுளத்தில் உள்ளாள்,
தன்னைத் தைநீர்விழவில் தாங்கித்
தருக்கும் எனதுதவக் கைகள்

1. உருவெளி-மயக்கத்தால் தோன்றும் பொய் உருவோடு உரையாடல்.

மின்னைப் பழிக்கும்இடை மடவார்
வேற்றூர்[1] எவருடலும் தீண்டா. (86)

"அன்னை தனைக்குழவிப் பருவத்
தணைத்துப் புளகம்உற்ற பின்னர்,
என்னை அடிமைகொள விரும்பாள்,
என்றும் இளமைவளர் குமரி
தன்னைத் தண்ணீரொழுக்கில் தாங்கித்
தருக்கும் எனதுதவக் கைகள்
பொன்னை[2] நிகர்அழகி எனினும்
புரிந்து[3] பிறள்உடலைத் தீண்டா. (87)

"மண்ணில் வனப்புமிகு மடவார்
வாழ்வில் மகிழ்வழங்க வல்லார்
எண்ணில் இயக்கியர்கள் உள்ளார்;
எனினும் எனதுரனை அழித்தாள்
பெண்ணில் பிறள்எவளும் இல்லை,
பேசா மடந்தைஇவள் ஒருத்தி,
கண்ணில் அருள்மிதக்கக் கண்டேன்,
காதற் குறிபிறிது காணேன். (88)

"வானூர் மதிஇறங்கி வந்து
வாய்பேசி முத்தமிட இல்லை
ஏனும் அதில்இனிமை கொள்வோம்;
எனது மனதுகக்கும் இவள்போல்
மேனாட் டழகியரும் நமரும்
விழைந்து மிழன்றவருள்[4] இல்லை,
தானாள என்உளத்தை வென்றாள்
தரணி தனில்ஒருத்தி இவளே. (89)

1. வேற்றூர் – அந்நியர்; அயலார். 2. பொன்னை – இலக்குமியை. 3. புரிந்து - விரும்பி. 4. மிழன்றவருள் – இனிமையாகப் பேசியவருள்.

படரும் மகளிர்உளத் தெல்லாம்
பசையும் விழைவுளதென் றெண்ணும்
மடமை சிறுமைதரும்; மடவார்
மாண்பு தருவர்அற உறவால்.
கடவுள் தனைவணங்கு பவரைக்
கட்டி அணைத்துமுத்தக் காணும்;
கடவுள், அறிவகத்துக் காட்டக்
கண்கண்ட தெய்வம்இவள் எனக்கு. (90)

“நித்தம் தொழுங்கடவுள் மக்கள்
நினைத்த தனைத்துந்தர வில்லை.
நத்தும் பொருள்களுள்அவ் அவர்க்கு
நன்மை பயப்பவற்றை நல்கும்.
எத்த இடம்தருவ தென்றும்
இறைமை அறிவொடியை யாதே.
சித்தந் திகைத்தவனை விழைந்தேன்,[1]
திருத்தி நெறிநிறுத்த நினைவாள். (91)

பித்தன் பிதற்றுவன்என் றெளிதில்
பேதை மதியர்எனை நினைப்பார்;
கத்திக் கழறுவது[2] வேண்டா,
காமன் எனக்கரசன் ஆகான்;
சத்தி தனக்குச்சரி பாதி
தகுந்தஇடம் சிவனும் தந்தான்.
புத்தி புணர்வில்இலை, கடவுட்
போதம் பிறங்கும்அவ ளாலே. (92)

“வீழ்வு சிறப்பதிரு தலையும்
வேட்கை முளைவிளைவி னுலாம்.
சூழ்வு கருதாமல் அவளைத்
தொழுதல் சுவைமிகுக்கும் எனக்கு.

---

1. விழைந்தேன் - காமுற்றேன். 2. கழறுவது - வற்புறுத்தல்; நெருக்குதல்.

வாழ்வு வழங்கும்அறக் காதல்;
வம்பர் விழையுங்கழி காமம்
தாழ்வு தரும்;அதனிற் சிறிதும்
சந்தேகம் இல்லை'' எனச்சொன்னார். (93)

### தலைவன் தேறத் தலைவி கூறல்

"அறத்தில் கனியும்உயர் காதல்,
அண்ணல்! உமதுடைமை; அந்தத்
திறத்தில்[1] உரை[2]குறையும் எனினும்,
சிறிதும் நிறைகுறைவில் அன்பேன்.
வெறுத்து மனங்கசக்க வேண்டா;
வீணே எணைப்புகழ்தல் மிகையாம்;
பொறுத்திர் முன்பேசாத பிழையை;
போற்றி நுமதடியைப் பிடிப்பேன். (94)

"உடலும் உயிரும்உம துடைமை,
ஒருவாது[3] எனைக்கொளல்நும் கடமை.
தொடலும் தொழுவதுவும் போதா;
தொண்டும் உழுவலும்நும் அடியில்;
இடலும் எனக்கினிய பேரும்;
என்றும் இனிப்பிரிய வொட்டேன்.
கடலும் சிறுகவிரி கருணைக்
கடவுள் நுமதுகழல் தொட்டேன். (95)

"பெருமை நுமதுரிமை; நாணம்
பேதைஎன் பெண்மைமடத் தியல்பு;
அருமை நுமதுரிமை[4] ஆதல்;
அஞ்சி அயரும்என துள்ளம்.
ஒருமை எனதுமன தல்லால்
ஒத்த உரிமைபிறி தில்லேன்;

---

1. திறத்தில் - கூறுபாட்டில்; குணத்தில்; 2. உரை - மாற்று.
3. ஒருவாது - நீங்காமல்; விலகாமல். 4. உரிமை - மனைவி.

இருமை நிலையிலும்என் உயிர்நும்
எளிய உடைமைஎன எண்ணீர்''. (96)

## தெளியும் தலைவன் கனியும், புலப்பமும்

என்றேன், எனதுகரம் பற்றி
இரண்டு விழிகளிலும் ஒற்றி,
''இன்றே பிறந்தபயன் அடைந்தேன்;
இதற்கு முனம்இதயம் உடைந்தேன்;
வென்றேன் இனிஉயிரில் வெறுப்பை;
விழைந்த எனதுபிழை பொறுப்பீர்;
நன்றே கனவு - இதனை இழவேன்,
நனவை அடைந்துதுயர் உழவேன். (97)

''காதற் கினியள்வரக் கருதாள்,
காணப் படும்உருவம் விருதா;[1]
ஓதற் கரியள்நலம் அருவம்,
உருவெளித் தோற்றம்இந்த உருவம்,
சாதற் குதவுகின்ற புண்ணைத்
தைத்த மருத்துவரைச் சபிப்பேன்;
வீதற் குரியன்எனைத் தடுப்பின்,
மிக்க துயருழக்க விடுப்பீர்.  (98)

''நோவேன், அகல்விர்,அவள் அருளை
நோற்று மறுபிறப்பில் அடையச்
சா வேன்; இனிஇருப்பன் தனியே;
சகியேன் பிறர்உறவை இனியே.
போவீர்'', எனத்தன்விழி பொத்திப்
புகன்ற அவர்இதழை முத்தி,
''ஏவீர் எனை, எதுவும் புரிவேன்;
ஏகேன், இனிப்பிரிவு தரியேன். (99)

---

1. விருதா - பயனற்றது; இல்லாதது.

## தலைவனைத் தேற்றும் தலைவியின் மாற்றம்

"பேதை முளிஉளத்[1]தில் அளி[2]யைப்
பெய்து களிதழைய விளைத்து,
வாதைப் படுத்திப்,பின்பு மாலை
வடித்த கணையில்கண்ணி இருத்தீர்[3];
சூதைமெய் என்றுநம்பி அணுக,
சொல்லாத சொல்லித் தொல்லை மிகுந்தீர்;
மாதை வருத்தல் ஆண்மை மாண்பா?
வண்மைப் பெருந்தகைநும் மகிழ்வா? (100)

"செய்ய தவக்கரத்தி னாலே
தீண்டிஎன் மெய்மாசு கழித்தீர்;
வெய்ய விழியினொளி வீசி
விழும இருள்முழுதும் ஒழித்தீர்;
ஐயம் அகலநுமை வருடி
அணைத்து மகிழும்எனை இன்னும்
ஐயப் படுவதன்பின் அறமா?
அருளா? என அணைத்தங்" கழுதேன். (101)

## தலைவன் தெளிந்து துணிதல்

"கண்ணைத் துடைத்துநுதல் நீவிக்
கதுப்பை இழுத்துமுத்தம் இட்டார்
புண்ணைப் பொதிந்துசுற்றி இருந்த
புடைவை[4] தனைத்தடவித் தொட்டார்.
விண்ணை இழிக்கவிழி களிலே
வெய்ய துளிவழிய வடித்தார்.
எண்ணை[5] நிலைநிறுத்தித் தெளிந்தென்
இரண்டு கரங்களையும் பிடித்தார். (102)

---

1. முளி உளம்-வறண்ட உள்ளம். 2. அளி-அருள். 3. இருத்தீர்-தந்தீர். 4. புடவை - துணி. 5. எண்ணை - எண்ணத்தை; நினைவை.

## தேர்ந்த தலைவனின் ஆர்வ மொழிகள்

மஞ்சத்துப் பஞ்சணையில் என்னை
மார்போ டணைத்திறுகத் தழுவி,
கஞ்ச முகத்துமுகம் சேர்த்துக்
கண்ணீரி னுற்கதுப்பைக் கழுவி,
"வஞ்சி! எனக்குயிரும் இன்ப
வாழ்வும் வழங்கி அருள் தருவாய்;
நெஞ்சில் தனிஅரசு புரிந்து
நிலைத்த கொலுவிருக்க வருவாய். (103)

"நஞ்சிற் கொடியவர்கள் விடுத்த
நாகப் படைநலிய மயங்கி
எஞ்சும் எனதுயிரைத் தழைப்பித்
தின்பப் பெருவாழ்வும் ஈந்து,
தஞ்சம் அருளநினைத் தன்பாம்
சஞ்சீவி[1] தந்துதவி நின்ருய்.
வஞ்சர் மனம்இடியப் பாட்டர்
மகிழ மணந்தினிது வாழ்வோம். (104)

"அன்பே! எனதுயிர்ப்பெண் அழகே!
அருளின் உருஒளிரும் அறிவே!
இன்பே எனக்குதவ மலர்விட்
டிறங்கி எழுந்தருளும் திருவே!
என்பேர்—நிலை—பிறப்பிங் கெதுவும்
என்னென் றறியாமல் நயந்தாய்;
நின்பேர் அருள்பெற இங்குய்த்த
நிலைத்த அறத்திறனை வியந்தேன். (105)

"திங்கள் முகத்தில் மறுஇல்லாய்!
தீம்தேன் மொழிதரவும் வல்லாய்;
எங்கள் குலத்தவர்கள் எல்லாம்
இழைத்த தவப்பயன்,நின் அருளை

1. சஞ்சீவி-மூர்ச்சை தீர்த்து உயிர்தரு மருந்து.

இங்கின்று பெற்றனன்''என் றியம்பி,
எழுந்து தழுவமுயன் றவரை
அங்கங் குழையஅணைத் தமர்த்தி,
''அன்புண் டெனில்அசைய மாட்டீர். (106)

## உளங்கலந்து காதலர் தம்முள் உரையாடல்

கிழமை முழுதும்எழு நாள்நீர்
கிடப்பின் அலால்என்உயிர்க் கணக்கும்,
உழவன் மருகன்தரு புண்ணும்
ஒன்ருய்க் கிழிபடுமென் றுணர்வீர்.
தழுவி அருகிருக்கத் தவிரேன்;
தாமிங் கமைந்தருள வேண்டும்.
வழுவில் மருத்துவர்க்கு நன்றி
வழங்கி அனுப்பநினைப் போம்நாம்.'' (107)

என்று மொழிந்து மஞ்சத் தருகே
இருந்த மணியடிக்கத் தூரச்
சென்று திரைமறைவில் இருந்த
சிறுமி எழுந்துவரக் கண்டார்.
''இன்றிங் கிருவர்சிறு பெண்டிர்
என்னைச்சிரிக்க எண்ணங் கொண்டீர்.
வென்றி என்பங்கில்விழ விழிப்பீர்;
வேண்டேனைக் கன்னிஇவள் இழுப்பாள். (108)

''நொந்தேனை வந்துகரம் பிடித்து,
நொடி[1]கள் பிசி[2]கள்பல தொடுத்து
செந்தேன் பிலிற்றுமொழி சிதறித்
திகைக்க மருட்டிச்சிறை பிடிப்பாள்.
வந்திந்த வம்பிதனை வணக்கி
வழக்கைத் திகைத்துவிடப் பாட்டர்

1. நொடி – விடுகதை, 2. பிசி – நுண்பொருள்,

சொந்த அடிகளுக்கெம் தொழுகை
சொல்லி, அழைத்துவரு வாய்நீ (109)

''மற்றமருத்துவர்க்கும் எங்கள்
மாருத நன்றிசொலி வருத்தம்
உற்ற உறவினர்கள் உவக்க
ஊறின் றெழிந்ததென உரைப்பை.
குற்றம் புரியும்இந்தக் குறும்பி
கோட்டம்[1] அடங்கிப்புண்ணும் குணமாய்[2]
கொற்றம் பெறுப்வரையும் நீஎம்
கூட இருந்துதவ வேண்டும். (110)

''விரைவில் வருவை''என வேண்ட,
வியந்து பயந்தஅந்த வனிதை
தரையில் நடவாமல் பறக்கத்,
தாமும் என்னேடுமிக நகைத்தார்.
உரையில் உவகைஉல கதனில்
உலவித் திரியுமென துள்ளம்
கரைஇல் களிக்கடலில் ஆழக்
கைதூக்கி மீண்டும்அவர் காத்தார். (111)

### தலைவன் தன் வரலாறு கூறல்

''போனள் திரும்புமுனம் உனக்குப்
புகலற் சூரியஉள, கேட்பை.
போனள் நிகழ்ந்தசில செய்தி
விளைவை அறியின்எனை வேட்பை.
வானுள உன்குரவர்[3] இருவர்
வயது முடியுமுனம் மாள,
தானுள நம்இருவர் தாயம்[4]
தன்னைஉன் மாமிவிழை கின்றுள். (112)

---

1. கோட்டம்-கோணல்; துடுக்கு. 2. குணமாதல் - ஆறுதல். 3. குரவர் - பெற்றோர்; தந்தை தாயர். 4. தாயம் - உரிய சொத்து.

"அண்ணர் வெறுக்க, அவர் இளையாள்
அழகொ டிளமைநலம் உடையாள்
எண்ணம் பிரிதாக, எந்தை
என்னைக் கருத்தரித்த அன்னை
வண்ண மயிலினைய ளோடு
வளங்கள் இலங்கிலங்கை நாட்டை
நண்ண[1], முன்னுளில்உடன் படித்த
நண்பர் ஒருவர்துணை உற்றார். (113)

"தகவும் திறலும்பல சால்பும்
தாளாண்மையும் உடைமை யாலே
மிகவும் விரைவில்பெரும் பொருளும்
மேலோர் உறவும்உயர் வாழ்வும்
புகழும் தமதுரிமை கொண்டார்
புதல்வன் ஒருவன்எனை உலகில்
திகழப் பலகலைகள் தேறச்
சீமைக்கும் சென்றுவரச் செய்தார். (114)

எந்தைக் கிளையள், என தத்தை,
எம்மோய்க் கிளமைமுதல் இனியள்,
சிந்தை உவக்கும்உயர் நண்பள்,
செய்யோள் தன்தோழியொடு தமையர்
நிந்தை நயந்துபுரி அண்ணி
நீளும் பகைவெறுத்து, நீர்சூழ்
விந்தை வளத்திலங்கை சென்று
விரும்பும் மகன்ஈன்ற தறிந்தாள். (115)

ஓதம்[2] உடல்பிரிக்க உயிர்தான்
ஒன்றி உணர்வுசெறிந் துவந்து,
காதல் கெழுமி[3] அண்ணி மகற்கு
கற்புக் கமழ்அறநல் துணைவி

---

1. நண்ண - அடைய; சேர. 2. ஓதம் - கடல். 3. கெழுமி - மல்கி; மிகுந்து.

ஈதல்தன் நட்புரிமை என்ன
எண்ணித் தவங்கிடந்தென் அத்தை
மாதர்க் கரசிஉனைப் பெற,அம்
மாமிபட் டாடையில்கண் வளர்ந்தாய்[1]. (116)

"கரும்பு மொழியள்என தன்னை,
கரையில் அருளுடையள் என்னைத்
திரும்பப் பழம்பெரிய நாட்டில்
சிறந்த நிலையடையக் காண
விரும்ப, விலக்குகிலர் எந்தை;
வினையும் நமைக்கூட்ட வேண்டி
அரும்பு நலன்உதவு பதவி
அளித்ததிந் நாட்டரசில் எனக்கு. (117)

"என்பு குழையஎனைத் தழுவி,
'எங்கள் குலத்தலைவர் சான்றோர்
துன்பு தெரியாத பெரியார்,
தூயோர் எனதுமுது தந்தை
முன்பு வணங்கி,எங்கள் பணிவு
முகம[2] னொடு வழங்கி, வாழ்த்தோ
டன்பு பெறுவை;பிற கங்குன்
அத்தை மகளொருத்தி, தமியள்.[3] (118)

"துயரும் நிலையில்வளர் மானைச்
சுற்றித் திரியுமொரு சிறுத்தை.[4]
அயரும் சிறுமிதனை அவள்நல்
அம்மானும் மாமியும்வந் தழைக்கப்
பெயரும் விருப்புடையர்; நாளும்
பேர விடாதுபல தடைகள்

---

1. "பிறந்தமருகியர்க்கு ஆடை விரித்தல், சிறந்த மகனுடைய மாமியர் பரிசம்," என்பது தமிழக வழக்கு: 2. முகமன் - உபசாரம். 3. தமியள்-தனியள்; துணை அற்றவள். 4. சிறுத்தை-சிறுபுலிபோலக் கொடிய மாமி.

உயரும், எனினும்இனி விரைவில்
உறுவர்என உரைப்பை' என்றார், (119)

"'உற்றேன் நெருநல்இந்தச் சூழல்;
உன்னை அறியாதுன் அருளும்
பெற்றேன் விடியுமுன், நம் பெரியார்
பெருமை உடன்இளைஞர் திறனும்
கற்றேன்; களிமகன்கை யால்உன்
கற்பின் மணம்கமழும் காதல்
துற்றேன்[1]; உன்சிற்றவையும் இன்று
சொற்றாள் உனதருமை நன்று. (120)

ஆட்டைத் திதிபதிக்குக் கொடுத்தாள்
அடக்க முடியாத வயவு
வாட்ட, வயிறுமுப்ப, உன்போன்
மாமி தலங்கள்தொழ நினைந்து,
வீட்டை விடுத்துவெளி யேறி,
வேண்டா மகவைக்கரு வுயிர்த்து,[2]
மாட்டை அடிப்பன்கைமைத் தங்கை
மகனாய் வளரவிட்டு வந்தாள். (121)

"ஆண்டு சிலகழிந்து தானே
ஆண்டு வரும்திதியை ஆள
வேண்டும் குடிக்குமகன் என்று
விலைக்குத் தான்பெற்றவனை மீள
ஈண்டு சுவிகரித்து வளர்க்கும்
எம்பி எனக்குநினை உதவத்
தூண்டு வினைதுரப்ப இன்று
சூழாது குத்தினதென் முத்தி. (122)

1. துற்றேன்–துய்த்தேன்; நுகர்ந்தேன். 2. கருவுயிர்த்து–ஈன்று; பெற்று,

தலைவன் தலைவிநலம் பாராட்டல்

வானே வறுமையுற எனக்கு
மகிழ்வு மழைக்கும்விழி மடவாய்!
தானே தனைஎனக்குத் தந்து
சாகும்உயிர் தழைக்கச் செய்தீந்
தேனே! என்உள்ளமலர் உறையும்
திருவே! மனவனத்தில் உகளும்[1]
மானே! உயிர்குளிர ஒளிரும்
மதியே! எனதுபுது வாழ்வே! (123)

"கண்ணே! களிவெறியை ஊட்டாக்
காதல் நறவில்லீனை கண்டே!
பெண்ணே! பிழைக்கவைத்தென் உயிரைப்
பேணித் தழைக்கஅருள் மழைக்கும்
விண்ணே! விழியில்உறை பாவாய்!
விரல்கள் உளரா[2]என் உளயாழ்ப்
பண்ணே![3] பரிந்தெனது கையைப்
பற்றி மணப்பன்எனப் பகர்வாய்." (124)

என்ன உரைத்தெனது கண்ணில்
இதய மொழிபடித்து[4] மகிழ்ந்தார்.
"தன்னந் தனியிருந்து சாம்பித்
தவிப்பள் தனக்குமகிழ் ஊட்டிச்
சின்னஞ் சிறியள்உளம் திளைக்கச்
செய்தீர்க் குரியள்"எனச் செப்ப,
கன்னஞ் சிவக்கமுத்த மிட்டார்;
கதவு திறக்கக்கையை விட்டார். (125)

---

1. உகளும் - துள்ளி விளையாடும். 2. விரலின் உளரா - விரலால் தடவபபடாத. 3. பண்ணே!-இசையே!; கீதமே. 4. கண்ணில் இதயமொழி படித்து-"என்னை மணப்பன் எனப்பகர்வாய்" என்ற தலைவன் வேண்டுகோளுக்கு, தலைவி-யின் உள்ளம் உரைக்கும் உடன்பாட்டை அவள் (கண்) "நாட்டம் இரண்டும் கூட்டி உரைக்கும் குறிப்புரையால் தலைவன் அறிந்து மகிழ்ந்தான்.

### தலைமக்களைப் பாட்டர் வாழ்த்தல்

முன்னம் புகுந்தமுது பாட்டர்
முறுவல் உடன்அருகில் வந்து,
"என்ன தவம்நமது முன்னோர்
இயற்ற, இவள்உனக்குன் உயிரும்,
இன்னல் ஒழித்துவகை எனக்கும்,
ஈயப் புகுந்தனள்இன் றிங்கிக்
கன்னல் மொழிக்குக்கண்ணி தந்தாய்[1]
காதல் மணமும்இனித் தருவாய். (126)

"கேட்ட வரத்தைமுனம் கொடுத்தாய்;
கேட்கும் வரமும்இனிக் கொடுப்பாய்;
"பாட்டன் விருப்பம் அறமென்றாய்;
பரிந்திச் சிறுவன்முகம் பாராய்;
வீட்டில் விளக்கெரிய மணப்பை.
வெறுப்பின் விடலைஉயி ரணைப்பை
கூட்டித் திருவருளும் இன்று
கொடுத்த மணம்இதெனக் கொள்வாம். (127)

"முன்னை அறம்முடிந்த முடிச்சு;
மூர்க்கர் இதைஅவிழ்க்க முயன்றால்
பின்னை அறம்அழிக்கும் அவரை;
போர் இருவிரும்என் கண்முன்
மன்ன மணந்துசெய்ய வேளும்
வள்ளியும் போல்இனிது வாழ்வீர்"
என்னஎன் கையெடுத்தங் கெழிலார்
ஏந்தல் கையில்கொடுத்து மகிழ்ந்தார். (128)

---

1. கண்ணி தருதல்-தலைவன் தலைவிக்குத் தன்காதற் குறியாய்ப் பூங்கொத்து அல்லது மாலை தருதல், அகத் துறை வழக்கு. மாலையில் அவள்குழலில் அம்பால் அவன் முல்லைக்கொத்தைச் செருகினதை, "கண்ணி தந்தாய்" என்று சுட்டினார்.

"எனக்குப் புதல்வர்இலே; எர்பி
தனயர் இருவருளும் மூத்தோன்
தனக்கு மனைவியர்கள் இருவர்
தமக்கும் வயிறடைக்கத் தன்முன்
வினைக்கு வருந்திஅவன் இறந்தான்;
மிடுக்கன் இளையன்அறம் பிறழான்,
உனக்கு முதற்குரவன், எங்கள்
உறவை வெறுத்திலங்கை சென்றான். (129)

"கொழுநன் இறந்துமகன் இல்லாக்
குறையை நிரப்புவன்என் றெங்கள்
வழுவும் பழியும்அணு காத
மரபைக் கெடுக்கஇவள் மாமி
உழவன், அழகன்,அவள் இனத்தான்,
உறவு தகவெதுவும் இல்லான்
வழியில் கயவன்ஒரு மகனை
வாங்கி உரிமைசெய்து வளர்ப்பாள். (130)

"பொல்லா அறுதலிகள் வளர்த்த
பொருவில் கழுதைமகன் இன்று
எல்லார் மனங்கொதிக்க இழைத்த
இழிந்த கொடியநெடும் பழியை
நல்லாள் இவள்துடைத்த நன்றி
நம்பியொடு நாங்களென்றும் மறவோம்.
பல்லார்முன் முல்லைஇவட் கணிந்தான்,
பாரோர்கள் வாழ்த்தஇனி மணப்பான். (131)

"மண்ணி[1]க் கிளர்மணியில் ஒளிபோல்
மடந்தை இவளுளத்தில் நீயும்,
கண்ணில் உறைபாவை போலக்
காழ்ந்தஉன் காதலற உளத்தில்

---

1. மண்ணி - கழுவி.

பெண்ணிற் சிறந்தஇவள் தானும்,
பேராது நின்றென்றும் பிறங்கி
எண்ணில் அடங்காத இன்பம்
இருவிரும் எய்திடுவிர்'' என்ருர். (132)

பெரிய மருத்துவர்கள் பின்னே
பெண்டிர்கள் மூவருடன் நுழைந்து
உரிய முறையில்அவர் கையும்
உரனும் வருடிமுகம் நோக்கி,
'எரியும் அனல்உடலில் இல்லை,
இனிய பழத்திஞெடு பாலும்
பிரியை இவள்இருந்து தருக;
பேசா துறங்கும்வகை புரிக. (133)

''நாங்கள் இனிஇருத்தல் மிகையாம்,
நாள்தோறும் வந்திவரைப் பார்ப்போம்.
நீங்கள் இனிக்கவல வேண்டா;
நீங்காது பெண்டிர்இவர் இருவர்
பாங்கில் இருந்திவர்க்கு வேண்டும்
பணிவிடை செய்துவரப் பண்ணீர்.
ஏங்கும் இளைஞருக்கிச் செய்தி
இயம்பி அகல்வம்எனச் சென்ருர். (134)

சித்தி அவரை வாழ்த்தல்

சித்தி[1] அணுகிஎனை முத்தி,
'தெய்வம் உனக்கிவரும், உன்னை
நத்திப் புலம்பும்இவர் தமக்கும்
நல்கும்இந் நன்ளுளில், நீவிர்
பத்தி யுடன்கடவுள் இன்றும்
பாட்டர்தம் வாயாலே பணிக்கும்

1. சித்தி - அன்னையுடன் பிறந்த தங்கை (வழக்கு).

புத்தி மொழிபோற்றி பணிந்து
பூவும் மணமும்என வாழ்வீர். (135)

"அத்தை மகள்தமியள், நும்பால்
அளவில் அன்புடையவள் இவட்கும்
ஒத்து நிலைத்தஅன்பு தருவீர்;
ஒருமை உளமுடையள், சிறிதும்
சித்தம் திரிவிர்எனில் தரியாள்;
தீமை அணுகாமல் ஓம்பி,
நித்தன் அருள்பெறுவிர்' என்றாள்;
நேச முடன்அவர்கை தொழுதார். (136)

'பாலைப் பருகிஇனி உறங்காய்;
பார்க்க விரும்புபவர் நாளைக்
காலை வருவர்;இங்கு நம்பி
கட்டில் அருகிரண்டு படுக்கை
சீலை[1] புதிதுவிரித் திந்தச்
சிறுமியர் இருவரும் துயில
வேலை முடித்துவெளி யேறீர்,
விரைதிர்,'' எனப்பாட்டர் அகன்றார். (137)

வேலை முடியுமுனம் ஒருத்தி
வெள்ளி வள்ளத்திற்பாலும் கொணர்ந்தாள்.
மாலை முதற்பொழுது கழிய
வாங்கி அதைநான்கொடுக்க உண்டார்.
பாலைக் கொணர்ந்தபணிப் பெண்எம்
'பாட்டர்தம் பக்கத்தில் ஒருத்தி
சீலை முன்தானைகண்ணில் ஒற்றித்
திகைத்தங் கழுதுநிற்பள்' என்றாள். (138)

**மாமியைத் தேட அவள் பணிப்பெண் வருதல்**

வாயிற் கதவைமெல்லத் திறந்து
வடியுங்கண் ணீரோடு மாமி

---

1. சீலை - துணி.

ஏய புரியும்பணிப் பெண்வந்
தென்காதிற் பையக் குசுகுசுக்க
மாயம் மறைஅறிய விரும்பா
மாண்பு மிகுந்தமனச் செம்மல்,
'தூய உளத்தள்உன தன்னை
துணைகொண்டு போய்வருதி', என்றார். (139)

'ஏகல் இருத்தல்இவை இரண்டில்
எதுவும் துணியகிலன் நானாய்,
ஆக முடிவுமது பாட்டர்க்
கறிவித் தவராணை பெறுவன்.
போக விரும்புகிலன், எனினும்
போய்விரைவி லேதிரும்பி வருவேன்;
ஈக விடை,சிறிதும் தாழேன்,
இங்கினிது நீர்துயில வேண்டும். (140)

'ஏகேன், இனிஉறங்கு வேன்என்
றியம்பி உறுதிசொலின் அல்லால்,
மீகான்நீர், என்மனதுப் படகு
மிதப்பதும் தாழுவதும் நுங்கை
ஏகாதி பத்தியத்தில் இருக்கும்;
என்றவர்தம் கையெடுத்தென் கண்ணில்
நோகாமல் ஒற்றிமுத்தி வைத்து,
நுடங்கி நடந்துவெளிப் போந்தேன். (141)

என்னை என்சிற்றன்னை யோடே
ஏவற் சிறுமியும்பின் தொடர,
தன்னைத் தவிரப்பிறர் அணுகாத்
தனித்த தவிசிருந்து பாட்டர்,
'உன்னை உன்மாமிஉழை யாள்[1]வந்
துள்ளே புகுந்தழைத்த செய்தி

1. உழையாள் – அணுக்கப் பணிப்பெண்.

என்னை? அவள்இனிய மகனுக்
கேதம் இனிஎதுவும் உண்டோ?' (142)

என்றென் முகம்நோக்கி எழுந்தார்;
என்னோடு தன்அறைக்குள் நுழைந்தார்.
'இன்றிங்கு நீவந்த பின்னே
என்ன புதுக்கொடுமை சூழ்ந்தாள்?
துன்றி உனை அழைக்கத் துணிந்து
தூதிவளை இந்நேரம் அனுப்ப
நின்ற மருமம்அறி யாமல்
நீபோகச் சம்மதிக்க ஒல்லேன். (143)

'வந்த வனிதையிடம் துருவி
வாய்கிண்டி மெய்முழுதும் அறிவோம்;
அந்தச் சிறுமியைஇங் கழைப்பை;
என்றார். அவளும்உடன் வந்தாள்.
'வந்தி[1] மகன்நிலைமை என்ன
மட்டில் இருப்பதெனு உரையாய்;
சிந்தை திகைத்தழுவ தேனோ?
செய்தி புகல்வை;எனப் பணித்தார். (144)

மாமியைக்காணாத பணிப்பெண் மறுகுதல்

'பெம்மான்! நுமதுதிரு முன்னே
பேசத் துணிகிலன்,நும் அடியாள்,
எம்மான்[2] உறங்கிவிழித் ததன்பின்
எழுந்து வெளிஉலவச் சென்றார்,
தெம்மாடி ஏழைபிற கவரைத்
திரும்பி அகத்துவரக் காணேன்,
அம்மாளை மாலையிற்சின் னம்மை
அங்கிருந்து வந்தபிற கறியேன். (145)

1. வந்தி - மலடி. 2. எம்மான் - என்தலைவன் - எசமான்.

‘எந்நாளும் எங்கும்அவர் ஏகார்;
இன்றிரவு மாடியையும் பூட்டி
நன்னாளும் போதும்‘மனை விளக்கை’
நாண்மலர்கள் தூவிநறும் புகையால்
சொன்னாறும்[1] தோத்திரங்கள் பாடித்
துதிக்கும் வழக்கம்அதை மறந்து
இந்நேர மாகியும்தம் வீட்டில்
இல்லாமற் போனவிதம் அறியேன். (146)

‘கோவில் குளங்களிலும் தோட்டம்
கொல்லைப் புறங்களிலும் பார்த்தோம்.
ஏவிப் புறத்தனுப்ப உழவன்
இன்று முழுதும்வர இல்லை.
ஆவி துடிக்குதவர் தம்மை
ஆற்றோரம் சோலைகளில் தேடத்
தாவித் துருவுவர்தம் துணையைத்
தந்தருள வேண்டும்அடி தொழுதேன். (147)

‘பெற்றுப் பிழைத்தவர்கள் எல்லாம்
பேசாமல் போய்ஒளிந்து கொண்டார்.
உற்ற உறவினருள் நண்பர்
ஒருவரும் இல்லைஅவர்க் கூரில்.
மற்று வசைவசவு சொல்லி
மனதைக் கசக்கவைக்கும் அம்மாள்
குற்றம் நினையாமல் நடந்து
கொள்ளும் பெருமையர்சின் னம்மாள். (148)

‘சின்னம்மை தன்னைமனைக் கனுப்பித்
தேடுபவர் தங்களுக்கும் ஆணை
சொன்ன பிறகெழுவன் அல்லால்
சும்மா தொழுதகன்று போகேன்.

---

1. சொன்னாறும்-சொல் + நாறும்; அதாவது, (கடவுள்) மொழிகமழும்.

அன்னம் எனக்கவர்கள் பல்லாண்
டளித்து வளர்த்தவர்கள், அல்லல்
இன்ன வகையினதென் றெனக்கும்
எள்ளளவும் சொல்லாமற் சென்றார். (149)

'என்ன வகையில்இனி அவரை
என்றெங்குக் காண்பன்என அறியேன்.
சின்னம்மை ஆவதுடன் வந்து
செய்வன தேர்ந்தாணை செலுத்தி,
இன்ன திவர்புரிக என்ன
ஏவாமல் இங்கிருப்பின், எளியேன்
தன்னந் தனியிருந்து செய்யத்
தக்க தெதுவுமில்லை', என்றாள். (150)

## பாட்டர் மறுமொழி

'திருட்டுக் கழகனும்,உன் எசமான்
தீய கொலைக்கும்இன்று காவல்
இருட்டுச் சிறைஅறையுள் இருப்பர்;
இரவு கழிந்தபிற கிந்தத்
தெருட்டுக் குத்தேராத கயவர்
சிறையைத் திறந்துவிடச் செய்வேன்.
உருட்டுப் புரட்டுழவன் உடன்உன்
உல்லாசப் பேர்வழி[1]யும் வருவான். (151)

'எல்லை இலாதபல கொடுமை
இன்றிங் கிழைத்தவள்உன் அம்மாள்,
தொல்லை இனிஎதனைச் சூழ்ந்து,
துயரம் இவள்உழக்கச் செய்ய
அல்லை[2]ப் பயன்படுத்தக் கருதி'
அழுதுவந் திங்கிவளை அழைக்க

1. பேர்வழி - ஆசாமி; ஆள் (வழக்கு) 2. அல்லை - இரவை; இருட்டை.

வல்லைநீ என்றறிந்து மருட்டி
மறைந்தவள் எங்கொழிந்து போனாள். (152)

'கொஞ்சும் மொழிகள் சொல வல்லாள்,
குடிலை[1], அடுப்பவர்கள் தன்னைத்
தஞ்சம் அடையவைப்பள்; முடிவில்
தவிக்க அலைத்தவர்கள் சாக
நஞ்சும் தரும்மனத்தள், அஞ்சாள்,
நாணே அறிகிலள்உன் அம்மாள்;
அஞ்சும் என்நெஞ்சம்அவள் வஞ்சம்;
ஆத லினால்இவளை அனுப்பேன். (153)

'எங்கள் அனைவரையும் இகழ்வாள்,
இந்தச் சிறுமிஉளம் அகழ்வாள்
பங்கில் இரக்கம்இலை எனக்கு;
பாரில் அவளிருப்பள் ஆகில்
எங்கும் துழவிஅவள் தன்னை
இரவே இழுத்துவரச் செய்வேன்.
கங்குல் கழியுமுனம் வருவாள்;
காணா விடின்இழவு தருவாள். (154)

'சாடித் துருவிவிடி[2] வதன்முன்
தரணி மிசைஇருப்பின் அவளைத்
தேடிப் பிடித்துவரத் தக்க
திறலும் அறிவும்உடை யவரை
நாடித் தரும்படிக்குச் செய்வேன்;
நானும் இவளும்வர மாட்டோம்;
வாடி அழுவதனை விடுத்து
வழிவரு பவர்க்குரை,' என்றார். (155)

---

1. குடிலை - வஞ்சகி. 2. துருவி-தேடி.

### பாட்டரிடம் சித்தி முன் நிகழ்வு கூறல்

பேசாமல் கேட்டுநின்ற சிற்ருய்
பெரியார் தமைவணங்கி, 'பாவி
கூசாமல் என்மகளை என்முன்
கொடிய வசைகள்சொலிக் குமைத்தாள்.
ஏசாமல் வேசைஅவள் இழைத்த
எண்ணற்ற கைதவங்கள்[1] எல்லாம்
வாசம கோசரமாய்[2] விரித்தேன்.
மடிந்து மனம்இடிந்து நின்ருள். (156)

'பூசி மெழுக[3]வழி இன்றிப்
புள்ளி விவரமொடு புரைகள்[4]
பாசி படருவது போலப்
படிறு[5] நிறைமனத்தள் பதற
ஊசி நுழையஇடம் இன்றி
ஒவ்வொன்றும் சான்றுடனே உரைத்தேன்.
ஏசி[6] மகிழமுடி யாமல்
ஏங்கி உளம்உடைந்தங் கிருந்தாள். (157)

'நாணும் நலனும்நுழைந் தறியா
நச்சு மனத்தள்,நவை பறைவேன்,[7]
பேணும் துணைபெறவும் ஒட்டேன்;
பெருமை அழியச்சிறை புகுத
வேணும் எனநினைத்துத், தலைமேல்
மிகுந்த வினைப்பயனின் வெள்ளம்
சாணும் முழமுங்கரு தாமல்
சாகத் துணிந்திருக்க வேண்டும். (158)

---

1. கைதவம்–வஞ்சனை. 2. வாசாம கோசரமாய்-சொல்லில் அடங்காமல். 3. பூசிமெழுக-மழுக்க. 4. புரைகள்–குற்றங்கள். 5. படிறு–வஞ்சம். 6. ஏசி-வைது. 7. பறைவேன்-தூற்றுவேன்.

'தேரில் சிறைஅலது தூக்கு
திட்டம்[1] கிடைக்கும்எனக் கண்டாள்;
பாரில் இனித்தனக்கு வாழ்வுப்
பற்றறுக்க நற்றுணிவு கொண்டாள்.
ஊரில் பெரியதனக் காரர்,
உறவின் முறையினருள் ஒருவர்
சேரில் அவருடன்சென் றிரவே
தெளிவு வெளிப்படுத்தி வருவேன். (159)

'மாடிக் கதவைமுதல் திறக்க
வல்ல கருவிகளும் ஆளும்
தேடி என்னேடுவரச் செய்க;
சிறுமி மருமானின் அறையுள்
ஓடி உறங்கவைத்துத் தானும்
உறங்கி, விடிந்தெழுந்து நம்மைக்
கூடி நிகழ்ச்சிகளை நானே
கூறத் தெரிவதுநன் றென்றான். (160)

பாட்டர் உடன்எழுந்தென் கையைப்
பற்றிஉன் 'அம்மைசொல்வ துண்மை,
வீட்டில்உன் அத்தானைத் தனியே
விட்டுநாம் போவதனை விரும்பாய்.
கோட்ட மனத்தள்[2]உன தத்தை
கொடியபழி அலது குற்றம்
சூட்டி உனைக்கெடுக்கச் செய்யும்
சூழ்ச்சி எனக்கடுக்கத்[3] துணிவேன்'. (161)

### தலைவி துயிலாத தலைவனைக் கழறல்[4]

என்றென் முகத்தைஅவர் நோக்க,
எப்படியும் தங்கிவிட விரும்பி

---

1. திட்டம்-நிச்சயம்; தவிராமல். 2. கோட்ட மனத்தள்-கோணிய அல்லது குற்றமுள்ள உள்ளம் உடையாள். 3. கடுக்க-ஐயப்பட்ட. 4. கழறல் – அன்பால் தவறு எடுத்துரைத்தல்.

ஒன்றும் உரையாமல் நானும்
ஓடி நடந்தறையுள் நுழைந்தேன்.
கன்று பிரிந்தபசுப் போலக்
கண்கலங்கி அத்தானும் கிடந்தார்.
சென்றென் முகத்தைஅவர் மார்பில்
செறித்துச் சிரித்திது நல் உறக்கம். (162)

இன்றும்மை நம்பிவெளி இறங்கி
இருந்து விடியின்எனைக் கெடுப்பீர்.
நன்று மருத்துவரும் நம்மை
நாளை நகைப்பதொடு போமோ?
வென்ற சுரம்உறக்கம் இன்றி
மீளில், எனதுநிலை என்னும்?
என்று கலங்குளனை அணைத்தே
'இரக்கம் இலாதென்னைப் பழிப்பாய். (163)

## தலைவன் மறுமொழி

'உறங்க விரும்பிவிழி மூடில்
உன்உருவம் தோன்றிஎனை இகழும்;
கறங்கும்[1] உளத்தில்உனை அமர்த்த
கண்கள் திறப்பின்அழும் காண.
பிறங்குன்[2]முகம்என் அகம் பொறித்தாய்;
பேர்த்தழிக்க உன்னாலும் கூடா.
அறங்கள் பிறர்க்குரைப்ப தெளிதாம்;
அருகில் இருந்துறங்க வைப்பாய். (164)

'ஏதும் வினவவிரும் பேன்நான்,
என்னருகில் நீயும்இனி உறங்கில்
போதும், உறக்கம்வரும், நோயும்
போயொழியும், மீளாது; வீணே
கோது[3] கருதாமல் கருணை
கூர்ந்தெனது கட்டில்அரு கமளி

1. கறங்கும்-சுழலும். 2. பிறங்கும்-ஒளிரும். 3. கோது-குற்றம்.

மீது படுப்பை, இரு வேமும்
விடியும் வரைதுயில்வம் என்ருர்.’ (165)

**நள்ளிரவில், தலைவி பாட்டர் வாயுரையால் மாமியின் சாவுணர்தல்**

நீரில் கயல்உறங்கும் நெடிய
நிலத்துக் கழுது[1]றங்கும், நீர்சூழ்
பாரில் அரவமொடு தொழிலும்
பயில்பவர் அற்ருெடுங்கும் பாஞள்.[2]
ஊரில் உயிரினமும் பிறவும்
உறங்கும் இடைஎனது செவியில்
மாரில்[3] துணுக்குறஎன் பாட்டர்
மந்த நடைஅதிரல்[4] கேட்டேன். (166)

பைய நகர்ந்தறையின் கதவுப்
பக்கத்துக் காதைவைத்துக் கேட்டேன்.
செய்ய உளம்தளர்ந்து முதியர்
திவளும்[5] குரலில்‘இது மெய்யா?
வெய்ய கொடியவள்தற் கொலையை
விரும்பி விழவில்இன்று விரைந்து
செய்யத் துணிவதற்கு நேர்ந்த
சீர்கேடு யாதென்று தெரியேன். (167)

‘நாஞல் உயிர்துறக்க வல்ல
நல்லாள் இலள், அவள்முன் யாரும்
காஞ திழைத்தகொடுங் குற்றம்
கண்டு பிடிக்கப்பட்டுத் தண்டம்
மாஞத தூக்குவரற் கஞ்சி
மற்ருேர் அறியாமல் தானே

---

1. கழுது -பேய். 2. பாஞள் – நடுஇரவு. 3. மார் – மருமம் (மார்பு என்பதன் திரிபு) (வழக்கு) 4. அதிரல் – அதிர்ச்சி. 5. திவளும் –துவளும்; தள்ளாடும்.

பேணு உயிரைவிடத் துணிந்தாள்;
பிணத்தை எரிப்பதற்கு முயல்வோம். (168)

'மதுவை விழவில்மித மிஞ்சி
மடுத்து மதிமயங்கி மடவோன்,
புதுவன் நெருசல்[1]இந்த ஊரில்
புகுந்த ஒருவனைமுன் பகைமை
எதுவும் இலாமல்இனம் அறியா
தெல்லோர்முன் மாலைநடுத் தெருவில்
கதுமெனக் குத்தினன், அக் குற்றம்
கருதாக் களியின்[2]வினை வாகும். (169)

'கொள்ளிக்குப் பிள்ளைஇல்லை என்ற
குறையும் நிறையவிலை கொடுத்துப்
பள்ளிக் கொதுங்காத பயலைப்
பார்த்துப் பொறுக்கினவள்; அவனைத்
தள்ளிச் சிறையில்அவன் தனிப்பில்,
சாவுக்கும் உதவாமல் தொலைவான்.
தெள்ளிப் புழுதிஅவள் வாயில்
திணித்துக் கெடுத்தவன்அவ் உழவன். (170)

'காலை விடிந்தவுடன் அவள்தன்
களிமகன் விடுதலை பெறுவான்.
சேலைப் பழிக்கும்விழிச் சிறுமி
சிந்தை அருட்கொடையிற் பெரியள்,
மாலை முதல்அவனைச் சிறையில்
வைத்ததற்கு மாமிதுயர்க் கழுவாள்,
வேலை எனக்கிடுவள், அவனை
விட்டொழிக்கச் செய்கஎனத் தொழுவாள். (171)

'தான்அக் களிமகனை வெறுத்தும்,
தன்காதல் அத்தானைக் குத்திப்

1. நெருநல் - நேற்று. 2. களியின் - கள்வெறியின்.

போன பொல்லாங்கை[1] அவன் தனக்குப்
புரிந்த உதவினெப் புகல்வாள்.
ஈனர் அவர்கொடுமை இரிய
இன்பம் இவளுறுதல் காண
மானம்[2] பொருமல்தன துயிரை
மாய்க்கத் துணிந்தனள்அம் மறத்தி. (172)

'விடிந்தஉடன் பிணத்தைத் தகனம்
விரைந்து செய,அவள்தன் விருப்பால்
முடிந்த சுவிகார மூடன்
மூட்டும் நெருப்பிலிட்டு முடித்து,
மடிந்த கொடியள் கருமரதி
வசையின்றி நடந்தபின், அவள்தான்
கடிந்த அழகியைஎன் பேரன்
கைப்பிடிக்கக் காணுவன்,'என் றெழுந்தார். (173)

### அயர்வால் தலைவி துயிலல்

செத்தாள், கொடுமைபல செய்தாள்
திறத்தும் பிறந்தசிறி தவலம்,
மத்தால் உடைதயிரும் வானில்
மதிமுன் இரிஇருளும் போல,
அத்தான் உயிர்பிழைத்த மகிழ்வும்
அவர்அறக் காதல்தரு மகிழ்வும்
வித்தார மாய்ப்பெருகும் உளத்தில்
வேரூன்ற மாட்டாமல் வீய. (174)

காலையில் காட்சியினில் அரும்பிக்
கழியும் பகற்பொழுதில் போதாய்

1. பொல்லாங்கு - தீமை, அல்லது கேடு. 2. மானம் - மாண்பிறந்த பொய் மானம்.

மாலை மலர்ந்தஉளக் காதல்,
மாடுழக்க வாடுமலர்[1] நிமிர்ந்து
வேலைத் திறம்உடையன் விரகால்[2]
மீண்டும் மிகமணத்தல் போல,
ஆலைக் கரும்பெனஅன் றத்தான்
அவலம்[3] அரைக்கப்பயன் படவே. (175)

உவப்பும் உளம்உளையும் துயரும்
ஓங்கிக் கரைகடந்த களிப்பும்
நிவப்ப, உணர்வுபல தொடர்ந்தென்
நெஞ்சை நிலைகுலைத்து மோத,
அவப்பல் நினைவலைக்கத் தளர்ந்த
அகத்தின் உரன்அழிந்தங் கிரவின்
தவப்பல் அமைதியினை அயர்த்தச்
சயன மிசைஅமர்ந்து துயின்றேன். (176)

### தலைவி கனவு

தந்தை மறந்தமுகங் கண்டேன்,
தழையும் உவகையுடன் கனவில்
வந்தென் நுதல்தடவி வாழ்த்தி,
வரன்என் மருகன்உனை வரிப்பன்,
சொந்தன் உன்மாமன்மகன், அன்பில்
தூயோன் தன்தந்தையினும் சான்றேன்
சிந்தை மகிழஅறத் துணையாய்ச்
சிறப்பும் பெறுவை,'எனச் சென்றார். (177)

அன்னை, அழுதொழுகு முகத்தள்
அணுகி முகம்அணைத்துன் மாமி

---

1. வாடுமலர், திறம்உடையவன் விரகால் மீண்டும்மணத்-தல்போலவும், ஆலையிலரைக்கக் கரும்பு சாறுதளிப் பயன்-படுதல்போலவும், 'அரும்பிப் போதாய் மலர்ந்த காதல், அத்தான் அவலத்தால் சாம்பி, அவர் தெவிவால் மீண்டும் அதிக மணமுற்றது' என்பது கருத்து. மலரும், கரும்பும் முறையே தனித்தனியே காதலுக்கு ஒப்புக் கூறப்பட்டது. 2. விரகால்-உபாயத்தால். 3. அவலம்-நோய் அல்லது வருத்தம்'

என்னைக் கெடுத்தவள்இன் றிரவில்
என்தங்கை யால்உயிரும் இழந்தாள்,
உன்னை எனதருமை மருகன்
உழுவல் உடன்மணப்பன், உவப்பை.
பின்னை[1] நீ, கண்ணன்அவன், என்றும்
பேராத காதலுடன் வாழ்வீர்'. (178)

என்ன, மகிழ்ந்தெனது நுதலில்
இட்டாள்சிந் தூரப்பொட்டும், எழிலார்
அன்னம்என நடந்து மறைந்தாள்.
அத்தான்தன் வெண்பரிவிட் டிறங்கி,
'தன்னந் தனியிருத்தல் மறமா?
தவிக்கும் எனைத்தணத்தல் அறமா?
கன்னங் குழையமுத்தம் இடுவேன்.
கட்டி அணைப்பின்கையை விடுவேன்.' (179)

துயிலுணர்ந்து தலைவி தன் கனவுக்கு நாணுதல்

என்றென் இருகரமும் பிடித்தார்;
இசைந்து தழுவவிழைந் தென்கை
சென்றந்தச் செம்மல்துயில் மஞ்சச்
சிறுகட் கொசுவலைவெண் திரையை
நன்று தடவ,விழித் தெழுந்து
நாண்நாணி ஏமாறி நகைத்து,
நின்ற நிலைப்படி[2]மத் தங்கென்
நிலையை விளக்கொளியில் கண்டேன். (180)

சேவல் சிறகடித்துக் கூவ,
சினகர[3]ச் சங்கினங்கள் சிலம்ப,[4]

1. பின்னை - கண்ணனின் காதலறக்கிழத்தியான நப்பின்னைப் பிராட்டி. 2. நிலைப்படிமம் - நிலைக்கண்ணாடி. 3. சினகரம் - கோவில். 4. சிலம்ப - ஒலிக்க.

வாவல்[1] இருளிடங்கள் தேடி
வானில் விரைந்திரிய ஊரில்
கூவல்[1] தொறுஞ் சிரல்கள்[2] குதிக்க,
குருவி குலவிக்குது கலிக்க,
காவல் மறவர்பணி ஓய்ந்து
கக்கத்துக் கம்பிடுக்கி மீண்டார். (181)

வெள்ளை மலரினங்கள் குவிய,
விரிந்து பலநிறஒண் பூக்கள்
கள்ளை உகுக்க,மரந் தோறும்
களித்தெழு புட்கள்கல கலக்க
தள்ளை[3]ப் பசுத்தொழுவில் கன்றைத்
தான்ஊட்ட அம்மாஎன் றழைக்க,
நொள்ளை[4]க் குடிஞைமரப் பொந்தில்
நுழையப் புலரி[5]விளர்த்[6] ததுவே. (182)

தலைவன் கனவு காணல்

மஞ்சத்தில் துஞ்சுபவர், கைகள்
மார்பில மடித்துயலர் முகத்தில்
நெஞ்சம் நிறைந்தபெரு நேயம்
நிருத்தம்இட, மரைஒண் வாயில்
கொஞ்சும் அமுதொழுகு குதலை
குலவத் தன்அன்னையொடும் கனவில்
கெஞ்சு குரலில்உளம் குழையக்
கிளவி[7] சிலமொழியக் கேட்டேன். (183)

நன்றி உணர்வுதுணை யாக
நான்நுமது நண்பு சிறப் புறவு

1. வாவல்-வெளவால். 1. கூவல்-குளம்; நீர்நிலைகள் 2. சிரல்-மீன்கொத்திப்புள், சிச்சிலிக்குருவி. 3. தள்ளை–தாய். 4. நொள்ளைக் குடிஞை - குருட்டுக் கோட்டான். 5. புலரி – விடியல். 6. விளர்த்தது – வெளுத்தது, 7. கிளவி – கூற்று; சொல்.

துன்று மதினி[1] மகள் காதல்
தொடர்பின்றிச் சொன்மறுக்கத் துணியாள்
நின்ற துணையில்அவள் நிலையில்
நேர்மை இறந்தவள்மெய் விருப்பை
வென்று மகிழும்வெறி எனக்கு
விளையும் எனநினைப்ப தேனோ. (184)

'தம்மைத் தொழுதுமகிழ் உள்ளம்,
தாமென்றும் பேணிமகிழ் தூயள்
செம்மைத்[2] திருவுடையள், நுமது
சிந்தை நிறைக்கும்அன்பும் உடையள்,
இம்மை இவள்விரும்பும் இன்பம்
எதனையும் எய்துவிப்ப தல்லால்,
வெம்மை[3] என்நன்மையெனும் விழைவு
விளைய இடம்பெறவும் விடுமா? (185)

'கன்னல்[4] மொழிஇவள்தன் காதல்
கனியாமல் கன்னவைத்தென் அலட்டால்
இன்னல்[5] இழைத்திருப்பன் என்னில்
எந்நாளும் நும்மகன்என் றென்னை
முன்னல்[6] எனக்கும்அரி தாகும்;
மூரிப் பகட்டை[7]ப்பெற்றம்[8] ஈனும்
என்னல்[9], நுமதுமகன் பிழையான்;
ஏமாறி[10] நும்மருகி அல்லள். (186)

'கண்ட பொழுதவளைத் தங்கள்
காதல் மருகிஎன அறியேன்.

---

1. மதினி - கணவன் உடன் பிறந்தாள். வழக்கு. 2. செம்மை - நேர்மை. 3. வெம்மை - விழைவு. 4. கன்னல்—கரும்பு. 5. இன்னல் - துன்பம் 6. முன்னல்-நினைத்தல். 7. பகட்டை-எருமைக் கடாவை 8. பெற்றம் - பசு. 9. என்னல் - என்னுதீர் 10. ஏமாறி - ஏமாறுபவள்.

MADURAI KAMARAJ UNIVERSITY

அண்டத்[1] தமியள்நிலைக் கஞ்சி
அகன்று பகல்முழுதும் அயர்ந்தேண்
கொண்ட உளநோயின் கொடுமை
குறைய அவள்உறவும் அன்பும்
விண்ட[2]சின் னத்தைதுணை கொண்டு,
மீறும்என் நோய்மருந்தைக் கண்டேன். (187)

'வெள்ளத் தலைவிலக்கிக் கரையில்
விடுத்த சிறுசெயலுக் கென்னை
கொள்ளக் குறைஇரக்கும் சிறுபுன்
குற்றம் நுமதுமகன் புரியான்;
தள்ளற் கரியமறக் கூற்றம்
தன்வாயில் என்உயிரைப் பிடுங்கி
உள்ளம் உகந்துடைமை கொண்டாள்;
உழுவல் அவளுரிமை உவப்பேன். (188)

'அப்பாவின் நன்மதிப்பும் தங்கள்
அன்பும் உரிமைகொண்ட அத்தை
இப்பால் எனக்குத்துணை ஈய
இறைவன் அருள்இரந்திங் கீன்றேள்
தப்பாத காதலறம் தூண்டத்
தன்னை எனக்களித்து மகிழின்,
உப்பாதல்[3] என்கடமை அன்றோ?
உள்ளம் அவள்உடைமை என்றும். (189)

'என்னின் எனக்கினியள், இறைவன்
என்னுயிரைப் பெண்ணுருவம் ஆக்கி
பொன்னின் சிலைபுனைந்து புகுத்திப்
பொருவில் மயில்இயலும் பொருத்தி
மின்னின் இடைநுடங்க நடந்தென்
வெற்றுடல்தன் மெய்விருப்புக் கிணங்க

1. அண்ட - நெருங்க 2. விண்ட - சொல்லிய. 3. உப்பரதல்- இனிதாதல்.

பின்னின் றியக்கவிடின், எம்முள்
பேதுறுவர்[1] யாவரெனப் பேசீர். (190)

'காதல் மருகியொடு நேரில்
கலந்தவள் உள்ளநிலை காண்பீர்;
ஓதில் உறவும்உளத் தன்பும்
ஒத்தெங்கள் நன்மைதனை விரும்பும்
கோதில்[2] குணத்தர்எங்கள் பாட்டர்,
கோதை இவள்அருமைச் சிற்றுய்,
தீதில் உளத்திவரை வினவித்
தேர்வீர்நும் சேய்[3]செயலும் தெளிவீர். (191)

என்று நகைத்துக்கரம் கூப்பி,
இரண்டு விழிகளையும் குறும்பு
நின்று மறையச் சிறிதச்சம்
நிழலத்[4] திறந்துதுயில் உணர்ந்தார்[5];
பொன்றும் இருள்புலரப்[6] பொழில்கள்
புள்ஒலிக்கக் கள்ளுகுக்கும் பொழுதில்
சென்று திரைவிலக்கி விழிப்பார்
செய்யமலர்க் கைபிடித்துச் சிரித்து, (192)

## தலைமக்கள் உளங்கலந்துவத்தல்

'வெள்ளம் விழுங்கவெறுத் திடத்தாம்
விரைந்து கரைவிடுத்தங் ககன்றீர்
உள்ளம் பறித்துவப்பள் ஒருத்தி
உமதத்தை மகள்,என்றென் மாமி
தள்ள முடியாத சான்று
தந்தும் பழிஅகற்றிக் கள்ளி
வள்ளல் உமக்குமண மாலை
மன்றில்இட வைப்பன்'என மகிழ்ந்தாள். (193)

1. பேதுறுவர் - மயங்குபவர்; ஏமாறுவோர். 2. கோதில்- குற்ற மற்ற, 3. சேய் - மகன், 4. நிழல் - சாயை தோன்ற, 5. துயிலுணர்ந்தார் - விழித்தார். 6. புலர-வாட; கெட; நீங்க.

# செய்யுள் முதற்குறிப்பு அகராதி


| | |
|---|---|
| அண்ணர் வெறுக்க | 37 |
| அத்தை மகள் | 44 |
| அப்பாவின் நன்மதிப்பும் | 60 |
| அம்மா அவர்க் குணர்வு | 27 |
| அருகு வரவும் | 11 |
| அருளும் அறனும் | 23 |
| அவ்வேளை யில்வெளியில் | 11 |
| அழகன் உழவன் | 16 |
| அறத்தில் கனியும் | 31 |
| அன்பே எனதுயிர் | 34 |
| அன்னை அமுதொழுகு | 56 |
| அன்னை தனைக்குழவி | 29 |
| ஆட்டைத் திதி | 39 |
| ஆண்டு சில | 39 |
| ஆர்ப்போடு | 7 |
| ஆன்ற எமதுகுடி | 22 |
| இடிந்து விழுந்த | 17 |
| இந்த முறி | 15 |
| இன்றும்மை நம்பி | 52 |
| ஈன்றோர் இருவரையுந் | 12 |
| உங்கள் குலமுதல்வர் | 16 |
| உடலும் உயிரும் | 31 |
| உவப்பும் உளம் | 56 |
| உள்ளம் பதைக்க | 4 |
| உற்றேன் நெருநல் | 39 |
| உறங்க விரும்பி | 52 |
| எங்கள் அனைவரையும் | 49 |
| எந்தைக் கிளையள் | 37 |
| எந்நாளும் எங்கும் | 47 |
| எல்லாருங் கைகொட்டி | 8 |
| எல்லாரும் வந்தமர்ந்த | 5 |
| எல்லை இலாதபல | 48 |
| என்பு குழைய | 38 |
| என்ற எனைவாரி | 25 |
| என்ற முதியவளை | 12 |
| என்றன் முகம் | 46 |
| என்றாள் உரை | 19 |
| என்று நகைத்து | 61 |
| என்று மருத்துவ | 26 |
| என்று மொழிந்து | 35 |
| என்றென் இருகரமும் | 57 |
| என்றென் முகத்தை | 51 |
| என்றென் செவி | 10 |
| என்றேன் எனது | 32 |
| என்ன உரைத்தெனது | 40 |
| என்ன மகிழ்ந்தெனது | 57 |
| என்ன வகையில் | 48 |
| என்னின் எனக்கினியள் | 60 |
| என்னை என் சிற்றன்னை | 45 |
| என்னை நின் அன்னை | 18 |
| எனக்குப் புதல்வர் | 42 |
| ஏகல் இருத்தல் | 45 |
| ஏகேன் இனி | 45 |
| ஏதும் வினவ | 52 |
| ஏலம் கிராம்பு | 2 |
| ஓதம் உடல் | 37 |
| கண்கள் திறந்து | 27 |
| கண்ட பொழுதவளை | 59 |
| கண்ணே களிவெறியை | 40 |
| கண்ணைத் துடைத்து | 33 |
| கரும்பு மொழி | 25 |
| கரும்பு மொழியள் | 39 |
| கல்லாரு முட்கம்பி | 8 |
| கன்னல் மொழி | 59 |
| காதல் மகள் | 14 |

| | |
|---|---|
| காதல் மருகி | 61 |
| காதற் கினியள் | 32 |
| காது கசக்கும் | 14 |
| காதைக் கடித்துனது | 15 |
| காலை எனதுயிரை | 24 |
| காலையில் காட்சியினில் | 55 |
| காலை விடிந்தவுடன் | 54 |
| கான்யாற்று | 4 |
| கிட்டாமல் பேசாமல் | 4 |
| கிழமை முழுதும் | 35 |
| குத்தின கத்தி | 19 |
| கூடங் கடந்தகன்ற | 20 |
| கேட்ட வரத்தை | 41 |
| கைமை நிலை | 13 |
| கையில் மகவெடுக்கும் | 3 |
| கொஞ்சும் மொழிகள் | 49 |
| கொள்ளிக்குப் பிள்ளை | 54 |
| கொழுநன் இறந்து | 42 |
| கோவில் குளங்களிலும் | 47 |
| சாடித் துருவி | 49 |
| சித்தி அணுகி | 43 |
| சிற்றன்னை | .0 |
| சின்னம்மை தன்னை | 47 |
| சீனத்துப் பெண்ணாகி | 14 |
| செத்தாள் கொடுமை | 55 |
| செய்ய தவக்கரத்தி | 33 |
| சேவல் சிறகடித்து | 57 |
| சொல்லும் தொடங்கி | 27 |
| தகவும் திறலும் | 37 |
| தந்தை இறக்க | 17 |
| தந்தை மறந்த | 56 |
| தம்மைத் தொழுது | 59 |
| தான்அக் களிமகனை | 54 |
| திங்கள் முகத்தில் | 34 |
| திருட்டுக் கழகனும் | 48 |
| துயரும் நிலையில் | 38 |
| தூரத்துச் சாளரத்தின் | 27 |
| தெருவில் திரிபவர்கள் | 12 |
| தேரில் சிறை | 51 |
| தொழுவில் உழவன் | 16 |
| நஞ்சிற் கொடியவர்கள் | 34 |
| நரியை அரி | 24 |
| நல்லார்க்கு அறம் | 22 |
| நல்லார் முகத்தில் | 7 |
| நன்றி உணர்வு | 58 |
| நாங்கள் இனி | 43 |
| நாணால் உயிர் | 53 |
| நாணிச் சுணங்கில் | 23 |
| நாணும் நலனும் | 50 |
| நானிந்த நாதியற்ற | 13 |
| நானும் மருத்துவ | 26 |
| நித்தம் தொழும் | 30 |
| நில்லோம் இனி | 17 |
| நீராடும் ஊரார்கள் | 4 |
| நீரார் எனை | 28 |
| நீரில் கயல் | 53 |
| நேரில் குறைஇரக்க | 18 |
| நொந்தேனை வந்து | 35 |
| நோவேன் அகல்விர் | 32 |
| நோற்ற குரவர் | 28 |
| படரும் மகளிர் | 30 |
| பணத்தைச் சிறிதும் | 2 |
| பருத்த உடலினர் | 5 |
| பல்லோரும் பார்க்க | 6 |

| | |
|---|---|
| பள்ளிக் கதவை | 22 |
| பாட்டர் உடன் | 51 |
| பாலைப் பருகி | 44 |
| பித்தன் பிதற்றுவன் | 30 |
| பின்னே அவள் | 21 |
| புகுவைஇத் தென் | 21 |
| பூசி மெழுக | 50 |
| பெம்மான் நுமது | 46 |
| பெரிய மருத்துவர்கள் | 43 |
| பெருமை நுமதுரிமை | 31 |
| பெற்றூர் இருவரையும் | 24 |
| பெற்றும் பிழைத்தவர்கள் | 47 |
| பேசாமல் கேட்டு | 50 |
| பேசும் மனிதருடன் | 1 |
| பேதை முளி | 33 |
| பைய நகர்ந்தறையின் | 53 |
| பொங்கல் பெருவிழவு | 3 |
| பொங்கல் விழவயர்ந்து | 5 |
| பொங்கி எழும் | 23 |
| பொல்லா அறுதலிகள் | 42 |
| போவோம் வருவை | 18 |
| போனுள் திரும்பு | 36 |
| மஞ்சத்தில் துஞ்சுபவர் | 58 |
| மஞ்சத்துப் பஞ்சணை | 34 |
| மடியில் கனம் | 17 |
| மண்ணிக் கிளர் | 42 |
| மண்ணில் வனப்பு | 29 |
| மதனர் உடல் | 25 |
| மதுவை விழவில் | 54 |
| மல்லார்தோள் | 6 |
| மல்லிட்டு வெல்வாரும் | 7 |
| மழுவு கெழுமி | 15 |
| மற்ற மருத்துவர்க்கும் | 36 |
| மன்றமுதுவர் | 10 |
| மாடிக்கதவை | 51 |
| மாலை மயங்க | 9 |
| மூத்தின் ஒளிதவழும் | 6 |
| முன்னம் புகுந்தமுது | 41 |
| முன்னை அறம் | 41 |
| முன்னைத் தவ | 28 |
| யாயும் அயலவளும் | 20 |
| வந்த வனிதை | 46 |
| வல்ல மருந்துனது | 22 |
| வள்ளி தனைமுருகன் | 10 |
| வாயிற் கதவை | 44 |
| வாராய்இப் பக்க | 21 |
| வாலை அடித்தகன்ற | 8 |
| வாவா எனமுதியள் | 19 |
| வாழ்க உலகு | 1 |
| வானம் வறப்பினுங் | 2 |
| வானுட்டு மாட்சி | 13 |
| வானூர் மதி | 29 |
| வானே வறுமை | 40 |
| விடலை கணை | 12 |
| விடிந்த உடன் பிணத்தை | 55 |
| விரைவில் வருவை | 36 |
| வீட்டிற் புகுந்த | 9 |
| வீதி நிறைந்திளைஞர் | 11 |
| வீரன்என் றெல்லோரும் | 9 |
| வீழ்வு சிறப்ப | 30 |
| வெள்ளத் தலை | 60 |
| வெள்ளம் விழுங்க | 61 |
| வெள்ளி முளைத்து | 3 |
| வெள்ளை மலரினங்கள் | 58 |
| வெளியில் இருப்பம் | 26 |
| வேலை முடியுமுனம் | 44 |